பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 பங்குனி 04 புதன்கிழமை 17.03.2021 கதிர் 132

## இது ரகசியம் அல்ல!

யாழ்.மாநகர சபையின் மேயர் மணிவண்ணனுக்கு இன்று முக்கியமான ஒரு நாள்.

வேறு ஒருவர் தொடர்பான வழக்கில் வடக்கு மாகாண மேன்முறையீட்டு நீதிமன்றம் இன்று வழங்கக் கூடிய உத்தரவு ஒன்று மணிவண்ணனின் தலை பக்கம்02

# 13ஆவது திருத்தத்துக்கு கட்டுப்பட்டுள்ளது அரசு!

## அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு



அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் நாட்டின் அரசமைப்பின் ஓர் அங்கம் என்பதால் அதன்படி நடந்து கொள்வதற்கு அரசு கட்டுபட்டுள்ளது என அமைச்சரவைப் பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் ஊடகவிலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார். 2

## 'புர்கா'வைத் தடை செய்வது பற்றி இறுதி முடிவு எடுக்கப்படவில்லை

### அரசு நேற்று அறிவிப்பு



இலங்கையில் பொது இடங்களில் முகத்தை மறைக்கும் புர்கா

அணிவதைத் தடை செய்வது தொடர்பாக தொடர்ந்தும் கலந்துரையாடப்பட்டு வருகின்றது என அமைச்சரவை பேச்சாளரான அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அதனைத் தடை செய்வது தொடர்பாக இன்னும் இறுதித் தீர்மானம் எடுக்கப்பட 2

## அஸாத் ஸாலி கைது!

### பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் விசாரணை



மேல் மாகாண சபையின் முன்னாள் ஆளுநரும் தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவருமான அஸாத் ஸாலி சி.ஐ.டியினரால் நேற்று மாலை கைது செய்யப்பட்டார்.

ஷரிஆசட்டத்தையேதான்ஏற்பார் எனவும், உள்நாட்டுச் சட்டத்தை ஏற்க முடியாது எனவும் சர்ச்சைக்குரிய கருத்துகளை அண்மையில் அவர் வெளியிட்டிருந்தார்.

இது தொடர்பில் சி.ஐ.டியில் முறைப்பாடுகளும் முன்வைக்கப்பட்டிருந்தன. இந்நிலையிலேயே அவர் கொள்ளுபிட்டியவில் வைத்து நேற்று கைது செய்யப்பட்டார். 2

## ஜே.வி.பியினருடன் கூட்டணி அமைப்பாரா கரு ஜயசூரிய?



கரு ஜயசூரிய தலைமையிலான சமூக நீதிக்கான தேசிய இயக்கமும், அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான ஜே.வி.பி யும் இணைந்து பயணிப்பதற்கான சாத்தியப்பாடுகள் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது.

தேசிய மக்கள் சக்தி எனும் பெயரில் பாரியதொரு கூட்டணியை ஜே.வி.பி. ஏற்கனவே 2

## பாடசாலைக் கல்வித் திட்டத்தில் சட்டத்தை ஒரு பாடமாக இணைப்பதற்கு ஆலோசனை

இலங்கையின் சட்டங்கள் தொடர் பில் பொதுமக்களின் அறிவு மிகவும் குறைவான மட்டத்தில் காணப்படுகின்றது எனவும், அது தொடர்பில் பாடசாலை மாணவர்களுக்கு அடிப்படைப் புரிதலை வழங்குவது மிகவும் முக்கியமானதாகும் எனவும் நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

முன்னேற்றமடைந்த நாடுகளில் அடிப்படை சட்டம் தொடர்பில் குடியியல் கல்வி வழங்கப்படுகின்றது எனவும், பாடசாலைப் பாடத் திட்டத்தில் சட்டஅறிவை இணைப்பது அவசரதேவையாகஉள்ளதுஎனவும் நீதி அமைச்சர் குறிப்பிட்டார்.

நாட்டின் தேசிய கல்வித் திட்டத்தில் இலங்கை 2

### பருத்தித்துறையைச் சேர்ந்த

## 9 வயது மாணவிக்கு கொரோனா வைரஸ்

(எஸ்.நிதர்ஷன்)

பருத்தித்துறையைச் சேர்ந்த 9 வயது மாணவி ஒருவர் உட்பட வடக்கு மாகாணத்தில் மேலும் மூன்று பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று நேற்று உறுதியாகியுள்ளது.

மன்னாரில் இருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட பெண் ஒருவருக்கும் 2

## யாழில் இன்று நீதிக்கான பேரணி; அனைவரும் அணிதிரள வேண்டும்

### மேயர் மணிவண்ணன் அழைப்பு



(எஸ்.நிதர்ஷன்)

சர்வதேச நீதி கோரி யாழ்ப்பாணத்தில் இன்று நடைபெறவுள்ள போராட்டத்தில் வடக்கு, கிழக்கு மக்கள் உணர்வுபூர்வமாகக் கலந்துகொண்டு 2

## சிங்கள ஊடகத்துக்கு அளித்த செவ்வி தொடர்பில் சுமந்திரன் எம்.பி. விளக்கம்



சிங்கள ஊடகமொன்றுக்கு வழங்கியசெவ்வியொன்றுதொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் விளக்கமளித்துள்ளார்.

அந்தச் செவ்வியில் பஸில் ராஜபக்ஷ தொடர்பாகக் கேட்கப்பட்ட கேள்விகளுக்குத் தான் வழங்கிய பதில்களை அடிப்படையாகக் கொண்டு, அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் பஸில் ராஜபக்ஷவுக்குத் தாம் ஆதரவளிப்பதாகக் கூறினார் என வெளியாகியுள்ள செய்தி தொடர்பாக 2

## தலைமன்னாரில் பஸ்ஸுடன் மோதியது ரயில்; பாடசாலை மாணவன் சாவு; 23 பேர் படுகாயம்!





(ந.லோகதயாளன்)

மன்னார் மாவட்டம், தலைமன்னாரில் பாடசாலை மாணவர்களை ஏற்றிச் சென்ற பஸ்ஸுடன் ரயில் மோதி ஏற்பட்ட கோர விபத்தில் மாணவன் ஒருவன் பலியாகியுள்ளார். அத்துடன் மாணவர்கள், ஆசிரியர்கள் உட்பட 23 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று பிற்பகல் 2.10 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றதைத் தொடர்ந்து 24 பேர் படுகாயமடைந்த நிலையில் மன்னார் பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

அவர்களில் 9 வயது மாணவன் பலியாகியுள்ளான் ஏனைய 23 பேரும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

படுகாயம் அடைந்தவர்களில் ஆசிரியர் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

தலைமன்னார் – பியர் 2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யெழுத்தையும் – அரசியல் எதிர்காலத்தையும் – தீர்மானிக்கப் போகின்றது என்பதுதான் விவகாரம்.

கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி உள்ளிட்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினால் யாழ்.மாநகர சபை வேட்பாளராகக்களம் இறக்கப்பட்டவர் மணிவண்ணன். ஆனால் அப்போது அவரால் மேயராக முடியவில்லை.

கடந்த பொதுத் தேர்தலில் அதே கூட்டணியில் போட்டியிட்ட அவருக்கும், மக்கள் முன்னணியின் மற்றைய இரு பிரமுகர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன் ஆகியோருக்கும் இடையில் ஏற்பட்ட பிணக்கை அடுத்து அவர் கட்சியிலிருந்து நீக்கப்பட்டார் என அறிவிக்கப்பட்டது.

மணிவண்ணன் உட்பட கட்சியிலிருந்து நீக்கப்பட்ட யாழ்.மாநகர சபை உறுப்பினர்கள் நால்வரை அதன் காரணமாக மாநாகர சபை உறுப்பினர் பதவியிலிருந்தும் நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சார்பில் தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலரிடம் கோரப்பட்டது.

எனினும் அத்தகைய நடவடிக்கைக்கு எதிராக மணிவண்ணனும் அவருடன் அணி சேர்ந்திருக்கும் மாநகர சபை உறுப்பினர்களும் மாவட்ட நீதிமன்றுக்குப் போனார்கள்.

மணிவண்ணனையும் ஏனையோரையும் கட்சியிலிருந்து நீக்கும் அறிவிப்புக்கு இடைக்காலத்தடை விதித்து மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டமையால், மணிவண்ணன் அணி தொடர்ந்து யாழ். மாநகரசபை உறுப்பினர்களாகச் செயற்பட முடிகின்றது. மணிவண்ணனும் இவ்வருட முற்பகுதியில் மேயராகத் தெரிவாகி அப்பதவியில் தொடரமுடிகின்றது.

இதற்கிடையில் கட்சியிலிருந்து மணிவண்ணனையும் ஏனையோரையும் நீக்கும் நடவடிக்கைக்கு இடைக்காலத் தடை விதித்த மாவட்ட நீதிமன்றத்தின் உத்தரவுக்கு எதிராக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வடக்கு மாகாண மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்துள்ளது.

அதில் மணிவண்ணனின் சகா ஒருவரின் மனுவில் இன்று முக்கிய உத்தரவு வெளியாகவுள்ளது.

மணிவண்ணன் அணியினரை கட்சியிலிருந்து வெளியேற்றும் நடவடிக்கைக்கு எதிராக மாவட்ட நீதிமன்றம் விடுத்துள்ள தடை உத்தரவை மாகாண மேன்முறையீட்டு நீதிமன்றம் ரத்துச் செய்து இன்று உத்தரவிடும் என்றால் மணிவண்ணன் அணியின் பாடு அம்பேல்தான்.

இன்று வழங்கப்படும் உத்தரவு மேயர் மணிவண்ணன் தொடர்புடையதல்ல. அவரது சகா ஒருவர் தொடர்பான மனு மீதான உத்தரவே இன்று வெளியாகியுள்ளது.

எனினும், எதிர்வரும் 31ஆம் திகதி இதேபோன்ற மணிவண்ணன் வழக்கில் வழங்கப்படப்போகின்ற உத்தரவுக்கு இன்றைய உத்தரவு வழிகாட்டலாக இருக்கப்போகின்றது என்பதால் இன்றைய உத்தரவு மிக முக்கியமானதாகக் கருதப்படுகின்றது.

மாவட்ட நீதிமன்றத்தின் இடைக்காலத் தடை உத்தரவை மாகாண மேன்முறையீட்டு நீதிமன்றம் இன்று ரத்துச் செய்தால், சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி உறுப்பினரின் பதவி நிலை உடனடியாகக் கேள்விக்கு உள்ளாகும்.

அத்தகைய சூழலில், மேன்முறையீட்டு நீதிமன்றுக்கு மேல் – உயர்நீதிமன்றம் போன்ற தரப்பிடம் இருந்து – வேறு விதமான தீர்ப்பு அல்லது உத்தரவை உடனடியாகப் பெறாவிட்டால் சம்பந்தப்பட்ட உறுப்பினர் பதவி இழப்பது தவிர்க்க முடியாததாகும்.

மேயர் மணிவண்ணனைப் பொறுத்தவரை அவரது வழக்கின் மீதான பணிப்பை – அல்லது உத்தரவை – மாகாண மேன்முறையீட்டு நீதிமன்றம் வரும் 31ஆம் திகதியே வழங்கவுள்ளது.

ஆனால், மார்ச் 31ஆம் திகதி நீதிமன்றம் வழங்கும் உத்தரவு, அதேபோன்ற இன்னொரு வழக்கில் இன்று வழங்கும் உத்தரவை அடியொற்றியதாக இருக்கும் என்பதால் –

யாழ்.மேயர் மணிவண்ணனின் அரசியல் எதிர்காலம் பற்றிய தலையெழுத்தும் இன்று தெரியும் என்று கூறுவதில் தப்பில்லை என்றே நினைக்கிறேன்.

★ ★ ★

முள்ளை, முள்ளால் எடுப்பது என்பார்கள். புத்தர் சிலை ஆக்கிரமிப்பு விடயத்தை அப்படி சிலர் கையாளத் தொடங்கியிருக்கின்றனரோ எனச் சந்தேகிக்கத் தோன்றுகின்றது.

ஆக்கிரமிப்பு அடையாளமாக பொது இடங்களில் புத்தர் சிலையை நிறுவும் ஒரு பாரம்பரியம் இப்போது நமது வாழ்வுக்குள் பலவந்தமாகப் புகுத்தப்படுகின்றது.

அதை எதிர்க்கவும், வீதிகளில், சந்திகளில் சுரூபங்கள் தோன்றுவதைத் தடுக்கவும், பொதுத் இடங்களில் தீடீர் திடீரென இப்போது பிள்ளையார் சிலைகள் முளைக்கின்றமையை அவதானிக்க முடிகின்றது.

யாழ்ப்பாணம் கந்தர்மடம் சந்தி, பூநகரி பக்கம் போன்ற இடங்களில் ஏறத் தாழ ஒரே மாதிரியான, ஒரே கைவண்ணத்தில் உருவாகிய, அழகான பிள்ளையார் சிலைகள் பொது மையங்கள், சந்திகளில் திடுதிப்பென தோன்றிவருகின்றன.

முள்ளை, முள்ளால் எடுக்கும் முயற்சி போலும் இது...!

– மின்னல் –

## தலைமன்னாரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பகுதியிலுள்ள ரயில் கடவையைக் கடந்து பணித்த பஸ்ஸின் பின் பகுதியிலேயே ரயில் மோதியுள்ளது.

குறித்த பகுதிக் கடவை பாதுகாப்பற்ற கடவை என்பது குறிப்பிடத்தக்கது.

## 13ஆவது திருத்தத்துக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மாகாண சபைத் தேர்தலை விரைவில் நடத்துவதற்கு அரசு நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றது என்றும், இந்த நடவடிக்கைகளின் பின்னால் இந்தியாவின் அழுத்தங்கள் உள்ளனவா என்றும் ஊடகவியலாளர் ஒருவர் கேள்வியெழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சரவைப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல, இந்த விடயத்தில் யாருடைய தலையீடும் கிடையாது என்று குறிப்பிட்டார்.

13 ஆவது திருத்தம் நாட்டின் அரசமைப்பில் ஓர் அங்கம் என்பதால் அது வொரு அடிப்படைச் சட்டமாகவே இருக்கின்றது. இதற்கு நாங்கள் கட்டுப்பட வேண்டும். அதன்படியே மாகாண சபைகளுக்கானத் தேர்தலை நடத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் அவர் கூறினார்.

## 'புர்கா'வைத் தடை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வில்லை என்றும், அது தொடர்பாக நன்கு ஆராய்ந்த பின்னரே தீர்மானிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

புர்காவை தடை செய்வதற்கான அமைச்சரவைப் பத்திரத்தில் தான் கையெழுத்திட்டுள்ளார் எனவும், இந்த வார அமைச்சரவைக் கூட்டத்தில் அது சம்பிக்கப்படும் எனவும் கடந்த வாரம் நிகழ்வொன்றில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்திருந்தார்.

எனினும், நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அவ்வாறான அமைச்சரவைப் பத்திரங்கள் எதுவும் சமர்பிக்கப்படவில்லை என்று அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டிருந்த அமைச்சர்கள் தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில், இந்த விடயம் தொடர்பாக நேற்று நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் ஊடகவியலாளர்களால் கேள்வி எழுப்பப்பட்டது.

இதன்போது பதிலளித்த அமைச்சரவைப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல, அந்த விடயம் தொடர்பாக தொடர்ந்தும் கலந்துரையாடப்பட்டு வருகின்றது என்று கூறினார்.

தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலானது என்பதால் புர்காவுடன் நிகாப்பையும் தடை செய்ய யோசனைகள் முன்வைக்கப்படுகின்றன. எனினும், அது தொடர்பாக ஆராய்ந்தே தீர்மானங்கள் எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## அஸாத் ஸாலி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதேவேளை, கைதான அஸாத் ஸாலி பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோகண நேற்றிரவு தெரிவித்தார்.

## சிங்கள ஊடகத்துக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சுமந்திரன் எம்.பி. தனது 'பேஸ்புக்' பக்கத்தில் விளக்கமளித்துள்ளார்.

43 நிமிடங்களைக் கொண்ட அந்தச் செவ்வியில் பஸில் ராஜபக்ஷ தொடர்பாக கேட்கப்பட்ட கேள்விகள் மற்றும் பதில்களை வாசித்து செய்தியின் உண்மைத் தன்மையை மதிப்பிட்டுக் கொள்ளுங்கள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிங்கள இணையத்தளத்துக்கு சிங்கள மொழியில் அவர் வழங்கிய செவ்வியில் கேட்கப்பட்ட கேள்விகள் மற்றும் பதில்களின் தமிழ்மொழி பெயர்ப்பை சுமந்திரன் எம்.பி. தனது பேஸ்புக் பக்கத்தில் வெளியிட்டுள்ளார்.

அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

SLVLOG என்ற இணையத்துக்கு அண்மையில் சிங்கள மொழியில் கொடுத்த பேட்டியில், அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் பஸில் ராஜபக்ஷவுக்கு நாம் ஆதரவளிப் போம் என்று நான் கூறியதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இது சம்பந்தமாக கேட்கப்பட்ட கேள்விகளும் பதில்களும் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு கீழே கொடுக்கப்பட்டுள்ளன. இப் பேட்டியின் முழுமையான காணொலியும் இத்துடன் இணைக்கப்படுகின்றது. இதில் 41.15ஆம் நிமிடத்திலிருந்து 43ஆம் நிமிடம் வரை இவ்விடயம் பேசப்படுகின்றது.

இவற்றை வாசித்து/ செவிமடுத்து இந்தச் செய்தியின் உண்மைத்தன்மையை மதிப்பிட்டுக் கொள்ளுங்கள்.

நன்றி,

எம்.ஏ.சுமந்திரன்.

கேள்வி:– 2024/2025 இல் எதிர்பார்க்கப்படுகின்ற ஜனாதிபதித் தேர்தலில் பஸில் ராஜபக்ஷ மற்றும் சஜித் பிரேமதாஸ ஆகிய இரு வேட்பாளர்களில் உங்கள் விருப்பு யாராக இருக்கும்?

பதில்:– தற்போது அதனைக்கூற இயலாது.

கேள்வி:– நிகழ்கால நிலமையின் அடிப்படையில்?

பதில்:– இந்த காலகட்டத்தில் எமது தெரிவு சஜித்தாகவே இருக்கும். இறுதியாக நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போதும் இரு தரப்பினரோடும் பேச்சு நடத்தினோம். அதன்போது சஜித்தே தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண இணங்கியதோடு அவரின் தேர்தல் அறிக்கையிலும் இது தொடர்பாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

கேள்வி:– சஜித் பிரேமதாஸவுக்கு நிகராக பஸிலும் முற்போக்கு சிந்தனை உடையவராகக் காணப்படுகின்றார். அவ்வாறான சூழ்நிலையில் உங்கள் நிலைப்பாடு?

பதில்:– எனக்கு அக்கருத்தோடு உடன்பாடில்லை. அவர் அமைச்சராக இருந்த கால கட்டத்திலேயே 'திவிநெகும' எனும் அபிவிருத்தித் திட்டத்தின் ஊடாக பிரதேச சபையின் அதிகாரங்களை மத்திய அரசின் கீழ் கொண்டுவந்திருந்தார். எனவே, அதிகாரப்பகிர்வு தொடர்பாக அவருக்குச் சரியான மேம்பட்ட விளக்கமிருப்பதாக நான் காணவில்லை.

கேள்வி:– உங்களுக்கு சஜித் பிரேமதாஸ அதிகாரங்களைப் பகிர்வார் என்ற நம்பிக்கை இருக்கின்றதா?

பதில்:–அவர் அதிகாரப் பகிர்வுக்கு இணங்கியுள்ளார். இருப்பினும் இது நிகழ்கால சூழ்நிலையே, 2024/2025 இன் போது பஸிலும் அதிகாரப் பகிர்வுக்கு இணங்குவாரானால், அவ்வாறே சிங்கள மக்கள் மத்தியிலும் இதனைப் பிரச்சாரப்படுத்தினால்.

கேள்வி:–சஜித் மூலமாக அல்லாது பஸிலின் மூலமாகவே இதனை அடைவது இலகுவல்லவா?

பதில்:– அவர் இணங்குவாராயின் அது இலகுவாக இருக்கும். இதனை நான் கோட்டாபய ராஜபக்ஷவிடமும் தெரிவித்திருந்தேன். நீங்கள் தீர்வுக்காக முயற்சி செய்தால் தீர்வை அடைய முடியும். உங்களை சிங்கள மக்களுக்கு எதிராகத் தொழிற்படுவதாக யாரும் குற்றப்படுத்த மாட்டார்கள் என்று கோட்டாபய ராஜபக்ஷவிடம் நான் கூறியிருந்தேன். அவரும் அதனை ஒத்துக்கொண்டார். ஆம் என்னால் முடியும் என்று அவர் ஏற்றுக்கொண்டாலும் அதனை இதுவரை செய்யவில்லை.

கேள்வி:– ஏன் அவர் அதனைச் செய்யவில்லை?

பதில்:– அவருக்கென்று சில கொள்கைகள் இருக்கின்றன. அதனடிப்படையில் அவர் இதனைச் செய்யவில்லை.

நன்றி சுமந்திரனே. கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் செல்லும் பிரயாணத்தின் இடையில் இந்தச் செவ்விக்காக நேரத்தைத் தந்தமைக்கு மீண்டும் தங்களுக்கு நன்றி – என்றுள்ளது.

## பாடசாலைக் கல்வித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

யின் சட்டத்தையும் ஒரு பாடமாக உள்ளடக்குவதற்குப் பொருத்தமான நெறிமுறையொன்றைத் தயாரிக்க நாடாளுமன்ற உப குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் கூறினார்.

பாடசாலைக் கல்வித் திட்டத்தில் சட்டத்தை ஒரு பாடமாகக் கொண்டு வருவது தொடர்பில் ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட உப குழு, அதன் பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையை ஒரு மாத காலத்துக்குள் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் கல்வி அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார்.

## யாழில் இன்று நீதிக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

போராட்டம் வெற்றிபெற ஒத்துழைப்பையும் ஆதரவையும் வழங்க வேண்டும்.

– இவ்வாறு யாழ். மாநகர மேயர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

யாழ்ப்பாணம் மற்றும் கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

பல்கலைக்கழக மாணவர்களால் பல்வேறு தரப்பினரிடம் இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு கோரப்பட்டுள்ளது.

தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட அநீதிக்கு சர்வதேச குற்றவியல் நீதிமன்றின் ஊடாக விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என்றும், தமிழ் மக்களின் அரசியல் வேணவாக்களான தேசியம், தாயகம், சுயநிர்ணய உரிமை என்பவற்றை அங்கீகரிக்கும் வகையில் தீர்வு கிடைக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்தே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்தப் போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் வகையில் இன்று புதன்கிழமை கிட்டு பூங்காவில் இருந்து நல்லூரில் சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வரும் திடல் வரையில் ஒருமாபெரும் பேரணியைப் பல்கலைக்கழக மாணவர்கள் ஏற்பாடு செய்துள்ளனர்.

இந்தப் பேரணியில் அனைத்துத் தரப்பினரையும் கலந்துகொள்ளுமாறு பல்கலைக்கழக மாணவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இந்தப் போராட்டத்தில் கலந்து கொள்வதற்காக கிழக்கு மாகாணத்தில் இருந்தும் பெருமளவான மக்கள் வரவுள்ளனர்.

எனவே, வடக்கு, கிழக்கு தமிழ் மக்களிடம் அன்போடும் உரிமையோடும் வேண்டுகோள் விடுக்கின்றேன், – என்றுள்ளது.

## 9 வயது மாணவிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தொற்று உறுதியாகியுள்ளது எனவும் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

குறித்த பெண் வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்டு பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட நிலையிலேயே தொற்று இருப்பது உறுதியாகியுள்ளது.

இதேவேளை, யாழ்ப்பாணம் சிறைச்சாலையிலிருந்து விடுவிக்கப்பட்டு சுய தனிமைப்படுத்தப்பட்டிருந்த ஒருவருக்கும் கொரோனாத் தொற்று கண்டறியப்பட்டுள்ளது எனவும் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மேலும் கூறினார்.

## ஜே.வி.பியினருடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கட்டியெழுப்பியுள்ளது. பல இடதுசாரி கட்சிகளின் பிரமுகர்களில் இதில் அங்கம் வகிக்கின்றனர்.

அரசின் ஜனநாயக விரோதச் செயற்பாடுகளுக்கு எதிராக பாரிய எதிர்ப்பு வேலைத்திட்டங்களை ஜே.வி.பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தி தற்போது முன்னெடுத்து வருகின்றது. குறித்த ஜன நாயக சமரில் கரு ஜயசூரியவையும் இணைத்துக்கொள்வது தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது. இதற்கான பேச்சுகள் இடம் பெற்றிருந்தாலும் அது இன்னும் வெற்றியளிக்கவில்லை எனத் தெரியவருகின்றது.

எனினும், நீதிக்காகவும், அநீதிக்கு எதிராகவும் நடைபெறும் போராட்டங்களுக்கு கரு ஜயசூரிய ஒத்துழைப்பு வழங்குவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.



# அரசாங்கத்தின் செயற்பாட்டால் சொத்துக்களின் மதிப்பு வீழ்ச்சி!

## சரத் பொன்சேகா வேதனை

நாடாளுமன்றத் தேர்தல் முடிவடைந்து தற்போது ஒருவருடம் பூர்த்தியடையவுள்ளது. எனினும் நாடாளு மன்றத்துக்கு உறுப்பினர் ஒருவரை அனுப்பிவைக்க முடியாத நிலையில் ரணில் விக்கிரமசிங்க இருக்கின்றார். அவ்வாறிருந்துகொண்டு மீண்டும் நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளவிருப்பதாகக் கூறுகின்றார் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப் பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி உருவாக்கப்பட்டு ஒருவருடம் பூர்த்தியடைந்துள்ளமையை முன்னிட்டு கடந்த திங் கட்கிழமை கொழும்பு ஹைட்பார்க்கில் மக்கள் கூட்ட மொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே சரத் பொன் சேகா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு –

தற்போது ஆட்சிப் பீடத்தில் அமர்ந்திருக்கும் பொதுஜன பெரமுனவின் கொள்கைகளை விடவும் எமது கொள்கை கள் மாறுபட்டவையாகும். நாட்டுமக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதே எமது கொள்கையாகும். எதிர்காலத்தில் அந்தப் பயணத்தை முன்னெடுப்பதற்கு நாம் தயாராக இருக்கின்றோம்.

எனினும் பொதுஜன பெரமுன அரசாங்கம் கடந்த காலத்திலும் தற்போதும் தத்தமது வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்திக்கொள்வதற்கே முற்படுகின்றார்கள். துறை முகங்கள், விமானநிலையங்களை நிர்மாணிக்கின் றார்கள். எனினும் அவற்றால் எந்தவொரு வருமானமும் இல்லை. மாறாக அதில் அவர்கள் பெருமளவான நிதியை தமதாக்கிக்கொள்கின்றார்கள்.

பெருமளவான கடன்சுமையில் இருந்து நாட்டையே நாம் கடந்த 2015 ஆம் ஆண்டில் பொறுப்பேற்றுக்கொண் டோம். எனினும் நாட்டை மேன்மேலும் கடனாளி ஆக்காமல் சிறப்பானதொரு நிர்வாகத்தை முன்னெடுத்துச்சென்றோம்.

ஆனால் 2019 ஆம் ஆண்டின் ஆட்சிபீடமேறிய தற்போதைய அரசாங்கம் புதிதாக பெருமளவில் நாண யத்தாள்களை அச்சிட்டுள்ளது.

இதன் விளைவாக நாட்டிலுள்ள ஏனைய சொத்துக் களின் மதிப்பு வீழ்ச்சியடையும். இவையனைத்தையும் செய்துகொண்டு தான் நாட்டின் பொருளாதாரத்தையும் மக்களின் வாழ்க்கைத்தரத்தையும் மீட்டெடுப்பதாக அரசாங்கம் கூறுகின்றது.

நாடாளுமன்றத் தேர்தல் முடிவடைந்து தற்போது ஒருவருடம் பூர்த்தியடையவுள்ளது. எனினும் நாடாளு மன்றத்துக்கு உறுப்பினர் ஒருவரை அனுப்பிவைக்க முடியாத நிலையில் ரணில் விக்கிரமசிங்க இருக்கின்றார். அவ்வாறிருந்துகொண்டு மீண்டும் நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளவிருப்பதாகக் கூறுகின்றார். அத்தகைய நிலையேற்படுவதற்கு நாம் ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை. 2025 ஆம் ஆண்டில் நாம் ஆட்சிப்பொறுப்பைக் கைப்பற்றி, நாட்டை வலுப் படுத்துவோம்.

போர் நடைபெற்ற காலத்தில் எமக்கு ஒரேயொரு தண் ணீர் போத்தலைக் கூட அனுப்பிவைக்காத, அநுராதபுரத் தைத் தாண்டி காலடி எடுத்துவைக்காத விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில போன்றவர்கள் தற்போது நாடு குறித்துப் பேசுகின்றார்கள். அடுத்ததாக சரத் வீரசேகர என்பவர் தேசப்பற்றாளர் போன்று பேசுகின்றார். அவருக்கு எவ ரேனும் ஜெனிவாவில் இருந்து விமான டிக்கெட் அனுப்பி வைப்பார்கள். அங்குசென்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அலுவலக முகவரிக்கு கடித மொன்றை அனுப்புவார். மனித உரிமைகள் ஆணை யாளரை நேரில் சந்திப்பதற்குக் கூட அவருக்கு வாய்ப்புக் கிடைக்காது. பின்னர் அங்கு உறவினர்கள் வீட்டில் நன்கு உணவருந்திவிட்டு நாடு திரும்புவார். அத்தகையவர் களுக்கு மக்கள் வாக்களித்து, தேர்தலில் வெற்றி பெறச் செய்கின்றார்கள்.– என்றார்.

# பொதுப் போக்குவரத்து நிறுவனங்களுக்கான குத்தகை நிவாரண கால எல்லை நீடிப்பு!

## இலங்கை மத்திய வங்கி அறிவிப்பு

பொதுப் போக்குவரத்து நிறுவனங்களுக்கான கடன் மற்றும் குத்தகை நிவாரண பொதியின் கால எல்லையை நீடிக்குமாறு இலங்கை மத்திய வங்கி கோரிக்கை விடுத்துள்ளது.

தொற்றுக் காரணமாக வணிகர்கள் மற்றும் பயணி கள் போக்குவரத்து சேவையில் ஈடுபடும் நபர்கள் எதிர் கொள்ளும் சிரமங்கள் மற்றும் தடைகளை கருத்தில் கொண்டு, கால எல்லையை மேலும் 06 மாதங்களுக்கு நீடிக்க கோரிக்கை விடுத்துள்ளது.

மேலும் அத்தகைய கடனை பெற்றுகொண்டவர்கள் 2021 ஏப்ரல் 19 அல்லது அதற்கு முன்னர் குத்தகைத் தவணைகளை ஒத்திவைக்க எழுத்து மூலமாகவோ அல்லது ஒன்லைன் மூலமாகவோ கோரிக்கை வைக்க வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு சலுகைக்கு தகுதியான நிவாரணத்துக்கு அபராதம்விதிப்பதையும் நிதி நிறுவனங்கள் தவிர்க்க வேண்டும் என மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக் கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக மேல திகதகவல்களைப்பெறத்தகுதியானநிதிநிறுவனங்களைத் தொடர்பு கொள்ளுமாறும் நிதி நிறுவனங்களுக்கு வழங் கப்பட்ட தொடர்புடைய சுற்றறிக்கைகள் இணையத்தில் வெளியிடப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# கொரோனா தடுப்பூசி பக்கவிளைவுகள் தொடர்பாக இலங்கையிலும் ஆய்வு!

கொழும்பு, மார்ச் 17

கொரோனாத் தடுப்பூசியின் பக்க விளைவுகள் தொடர்பாக ஆராய் வதற்கு சுகாதார அமைச்சு நடவ டிக்கை எடுத்துள்ளது.

இதற்காக தொற்றுநோய் விஞ் ஞானப்பிரிவின் குழுவொன்று ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர், விசேட வைத்திய நிபுணர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

பக்கவிளைவுகள் ஏற்பட்டமை யால், கொவிஷீல்ட் அஸ்ட்ராஜெசெகா தடுப்பூசியின் பாவனையை சில உலக நாடுகள் தற்போது தற்காலிக



மாக நிறுத்தியுள்ளன.

இலங்கையிலும் கொவிஷீல்ட் தடுப்பூசி ஏற்றிக்கொண்டவர்களில் இதுவரை 30 பேருக்கு குருதி உறை தல் ஏற்பட்டுள்ளதாகப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் அண்மையில் தெரிவித்திருந்தது.

இந்த நிலையிலேயே தடுப்பூ சியின் பக்கவிளைவுகள் தொடர்பாக ஆராய்வதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

எவ்வாறிருப்பினும் இலங் கையில் தடுப்பூசி பாவனையை நிறுத்துவது தொடர்பாக இதுவரை எவ்வித தீர்மானமும் எடுக்கப்பட வில்லை என இராஜாங்க அமை ச்சர், விசேட வைத்திய நிபுணர் சுதர்– ஷினிபெர்னாண்டோபுள்ளேதெரிவித் துள்ளார்.

# அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசி பயன்பாடு தொடருமாம்!

இலங்கையில் ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசியின் பயன்பாடு தொடரும் என அமைச்சரவை இணைப்பேச்சாளர் அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரி வித்துள்ளார்.

நேற்று (செவ்வாய்க்கிழமை) இடம்பெற்ற அமைச்சரவை முடிவு களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் பேசிய அவர், சில ஐரோப் பிய நாடுகளில் மட்டுமே தடுப்பூசி தற்காலிகமாக நிறுத்தி வைக்கப் பட்டுள்ளது எனக் கூறினார்.

இருப்பினும் இந்தச் செய்திகள் தொடர்பாக மக்கள் அச்சப்படத் தேவையில்லை எனக் குறிப்பிட்ட அமைச்சர் ரமேஷ் பத்திரன, உலக சுகாதார ஸ்தாபனத்தால் வழங் கப்படும் தடுப்பூசிகளின் மற்று மொரு தொகுதி விரைவில் கிடைக் கும் என்றும் தெரிவித்தார்.

அண்மையில் கொவேக்ஸ் திட் டத்தின் கீழ் உலக சுகாதார ஸ்தாப னத்தால்வழங்கப்பட்டதடுப்பூசிகளை, 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு செலுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

எனவே அடுத்த இரண்டு, மூன்று



மாதங்களுக்குள் கொரோனா வைரஸ் பரவுவதைக் கட்டுப்பாட்டுக் குள் கொண்டுவர முடியும் என அர சாங்கம் நம்புவதாகவும் அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்துள்ளார்.




# மதிக்கின்றபோதே மாற்றங்கள் உருவாகும்

மற்றவர்களைத் தம்மைவிட இகழ்ச்சிக்குரியவர் களாக, கேலிக்குரியவர்களாக எடைபோடுவதை இக் கால உலகில் காணக் கூடியதாக உள்ளது. தாமே திறமையாளர்கள் மற்றவர்கள் கால்காசும் பெறத் தகுதியற்றவர்களாகக் கணிக்கின்ற மனப்போக்கு பெருகியுள்ளது. மற்றவர்களை மதிக்கின்றபோதே மாற்றங்கள் உருவாகும். மதியாதார் தலைவாசல் மிதியாதே என்பது ஔவையின் தமிழ் வாக்கு. இயேசு தம் சீடரைப் பணிக்கு அனுப்பியபோது கூறிய அறி வுரைகளில் இதுவும் ஒன்றாகும். உங்களை, நீங்கள் செல்லும் வீட்டில் ஏற்றுக் கொள்ளவில்லை என்றால் உங்களை தூசியைக் கூட தட்டி விட்டு வாருங்கள் என்று அறிவுறுத்தினார். மற்றவர்களை மதிப்பது எவ்வளவு மகத்துவமானது என்பது தெளிவாகின்றது.

பிள்ளைகள் பெற்றோர்களையும், பெரியோர்கள், ஆசிரியர்கள், வழிகாட்டிகளையும் மதிக்கின்ற பண் புடையவர்களாகவும் எப்போதும் வாழக் கற்றிருக்க வேண்டும். மதிப்பிழக்கும்போதே கசப்புணர்வுகளும், எதிருணர்வுகளும் கைக்கொள்ளப்படுகின்றன. எவரையும் குறைந்தவராக எடை போடக் கூடாது. நாம்தான் முதலில் மற்றவரை மதிக்கப் பழகிக் கொள்ள வேண்டும். மற்றவரிடமிருந்து மதிப்பை எதிர்பார்க் கும் போதே, காழ்ப்புணர்வுகள் உருவாகின்றன. காரணமில்லாமல் கூட நாம் பல வேளைகளிலே பலரை மதிக்கத் தவறிவிடுகின்றோம்.

மதிப்புக்கும் போற்றுதலுக்கும் உரிய இடங்களே ஆலயங்கள், கோவில்களாகும். புனிதம் பேண வேண்டிய இடங்களில் பொழுதுபோக்கிடங்களாகவும் கடவுள், தெய்வங்கள் இருக்கும் இடங்களையும் காணி பிடிக்கும் இடங்களாகவும் மாற்றி விடுகின் றனர். மதிக்காமை, ஏற்றுக் கொள்ளாமையாலே சம யச் சண்டைகளும் மத முரண்பாடுகளும் ஏற்படக் காரணமாய் இருக்கின்றன. இயேசு கூறுகின்றார். 'என் வார்த்தைகளைக் கேட்டு என்னை அனுப்பி யவரை (தந்தையாம் கடவுளை) நம்புவோர் நிலை வாழ்வைக் கொண்டுள்ளனர். அவர்கள் தண்டனைத் தீர்ப்புக்கு உள்ளாக மாட்டார்கள்." (யோவான் 5:24) இறைவார்த்தை யாரெல்லாம் ஏற்று, மதிக்கின்றார் களோ அவர்கள் இறை ஆசீரை அடைந்து கொள் வார்கள். எதை விதைக்கின்றோமோ அதனைத்தான் அறுவடை செய்ய முடியும். மற்றவர்களை மதிக்கின்ற போது நாமும் மதிப்புக்குள்ளாவோம். எம்மிலிருந்தே மாற்றங்கள் முதலில் உருவாக வேண்டும்.

**அன்ரனி பீற்றர் அபிர்ராஜன்**
**ஓய்வு நிலை ஆசிரிய ஆலோசகர்**

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# பிரிட்டனின் பிராயச்சித்தம்

*"ஜெனீவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை மீதான புதிய பிரேரணைக்கு பிரிட்டன் தலைமை தாங்குவது நட்புறவற்ற செயலாகும். இது நம்பிக்கைத் துரோகமாகும்"* – இவ்வாறு சீறியிருக்கின்றார் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன.

அந்தக் குற்றச்சாட்டுக் குரலிலேயே அக்குற்றச்சாட்டுக்கு அடிப்படையான காரணத்தையும் தமக்குத் தெரியாமலேயே பிரதிபலித்திருக்கின்றார் இலங்கை வெளிவிகார அமைச்சர் என்பதுதான் இதில் வேடிக்கையான விடயமாகும்.

இலங்கை மீது – பொதுநலவாய அமைப்பைச் சேர்ந்த ஒரு நாடான இலங்கை மீது – பிரிட்டன் இத்தகைய நடவடிக்கை எடுப்பது ஒரு நட்புறவற்ற செயல் என்று அவர் குறிப்பிட்ட கருத்துக்குள் தான், இந்த நடவடிக்கையை பிரிட்டன் முன்னெடுப்பதற்கான அர்த்த பரிமாணமும் புதைந்து கிடக்கின்றது என்பது நாம் கவனிக்கத்தக்கது.

பொதுநலவாய அமைப்பின் தலைமைத்துவப் பங்கு பிரிட்டனுக்குரியது. எங்கெல்லாம் பிரிட்டனின் – வெள்ளையரின் – ஆட்சி அதிகாரம் கொடி கட்டிப் பறந்ததோ அந்த நாடுகள் எல்லாம் சேர்ந்துதான் 'கொமன்வெல்த்' என்ற பொதுநலவாயக் கட்டமைப்பை உருவாக்கின. அந்த அமைப்பின் அங்கத்துவ நாடுகளில் ஒன்றுக்கு – இலங்கைக்கு – இப்போது ஜெனிவா மனித உரிமைகள் கவுன்ஸிலில் தான் எடுக்கும் நடவடிக்கை மூலம் பிரிட்டன் துரோகமிழைக்கின்றது என்பதுதான் கொழும்பில் குற்றச்சாட்டு.

ஆனால் உண்மையில் பிரிட்டன் ஆற்றுவது குற்றமல்ல. சுமார் முக்கால் நூற்றாண்டுகளுக்கு முன்னர் இந்த நாட்டில் தான் விட்டுச் சென்ற – தான் இழைத்துச் சென்ற – வரலாற்றுத் தவறுக்கு பிரிட்டன் காலம் கடந்தாவது ஒரு சிறிய பிராயச்சித்தம் செய்ய முயலுகின்றது என்பதுதான் உண்மை.

அதுவும் கூட, இந்த விடயங்களைக் கடந்த பத்து ஆண்டுகளுக்கு முன்னர் இருந்தே பின்னணியில் இயக்கி வந்த அமெரிக்கா, முன்னைய அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் சாதுரியமற்ற முடிவினால் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலிருந்து வெளியேறியமையால், அந்தப் பொறுப்பு பிரிட்டன் தலைமை மீது வீழ்ந்தது. அதனை பிரிட்டன் இப்போது அமெரிக்காவுக்குப் பதிலாக முற்கொண்டு செல்கின்றது. அவ்வளவுதான்.

காலங்காலமாக இலங்கைத் தீவின் வடக்கும் கிழக்கும் தமிழர் தேசமாக – தனியான இறைமையுள்ள, சுயாதிபத்திய பிரதேசமாக – விளங்கியது. வடக்கு, கிழக்கில் தமிழர்களும், தெற்கில் சிங்களவர்களுமாக வெவ்வேறான பண்பாடுகளுடன், முற்றிலும் வேறுபட்ட இரண்டு சமூகங்களாக – தனித்தனி இனங்களாக – தனித்தனி இராச்சியங்களைக் கொண்டதாக – இலங்கைத் தீவு விளங்கியது.

அந்நியரான போர்த்துக்கேயர்கள் 16ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இத்தீவில் காலடி எடுத்து வைத்த போது அதுதான் நிலைமை. ஆரம்பத்தில் ஒப்பந்தங்களிலும், பின்னர் போர்களிலும் ஈடுபட்ட போர்த்துக்கேயர்கள் 1619 இல் இறுதிப்போர் நடத்தி, தமிழர் தேசத்தை முழுமையாகக் கைப்பற்றி, தமிழ் மன்னன் சங்கிலிகுமாரனைத் தூக்கிலிட்டனர்.

ஆயினும் அவர்களும் சரி, அவர்களிடமிருந்து தமிழ் இராச்சியத்தைக் கைப்பற்றிய ஒல்லாந்தரும் சரி, தமிழர் தாயகத்தின் பிரதேச ஒருமைப்பாட்டைப் பேணினர். தமிழர் தேசத்தின் இனத்துவ அடையாளத்தை அங்கீகரித்து நின்றனர்.

ஆனால் இலங்கைத் தீவின் ஆட்சிக் கட்டுப்பாட்டை 1799இல் கைப்பற்றிக் கொண்ட ஆங்கிலேயக் குடியேற்ற சாம்ராச்சியம், தனது நிர்வாக வசதிக்காக 1833 இரண்டு தேசங்களையும் – தமிழர் தேசம் மற்றும் சிங்களவர் தேசம் ஆகிய இரண்டையும் – ஒன்றாக்கி, ஒன்றையாட்சி அமைப்பைத் திணித்தது.

ஆங்கிலேயே அந்நிய குடியேற்றவாதம் இலங்கைத் தீவில் தேசிய இனங்களுக்கு இடையில் தேசியப் போராட்டம் உருவாக இப்படித்தான் அடித்தளமிட்டது. பிரிட்டிஷ் சாம்ராச்சியத்தின் தூரதிருஷ்டியற்ற, அந்தக் குறுகிய நோக்கு நடவடிக்கைதான், இந்தத் தீவில் எண்ணிக்கையில் பெரும்பான்மையினரான சிங்களவர்களிடம் எண்ணிக்கையில் சிறுபான்மையினரான தமிழர்களின் தேசத்தை அடிமையாக்கி, இனச்சிக்கலுக்கும் தேசிய இன முரண்பாடுகளுக்கும் – கடைசியில் இனத்துவப் போருக்கும் –வழி செய்தது.

அந்த முட்டாள்தனமான நடவடிக்கையின் விளைவுகளைத்தான் இலங்கைத் தீவு இன்னும் அறுவடை செய்து கொண்டிருக்கின்றது. ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இப்போது சில்லெடுக்கும் பிரச்சினையின் ஆரம்பப் புள்ளி கூட ஆங்கிலேய சாம்ராச்சியத்தின் 190 ஆண்டுகளுக்கு முற்பட்ட இந்த நடவடிக்கைதான்.

அதற்கான பிராயச்சித்தத்தைத்தான் பிரிட்டன் இப்போது செய்கின்றது. அது இப்போது இழைப்பது குற்றமோ, துரோகமோ அல்ல. பாபநாசப் பணிதான்.

# 2024 இல் சஜித்தை ஜனாதிபதியாக்குவது உறுதி என்கிறார் திஸ்ஸ அத்தநாயக்க



எதிர்வரும் 2024 ஆம் ஆண்டு சஜித் பிரேமதாஸவை ஜனாதிபதியாக்கி ஆட்சியைக் கைப்பற்றுவதற்கான நடவடிக்கைகளைத் தற்போதே ஆரம்பித்துவிட்டதாக ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி உருவாக்கப்பட்டு ஒருவருடம் பூர்த்தியடைந்துள்ள நிலையில் கொழும்பு ஹைட்பார்க்கில் கடந்த திங்கட்கிழமை மக்கள் கூட்டமொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே, திஸ்ஸ அத்தநாயக்க மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு –

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்தக் கூட்டத்தின் ஊடாக நாம் மீண்டும் எமது வெற்றிப்பயணத்தை ஆரம்பித்திருக்கின்றோம்.

எதிர்வரும் 2024 ஆம் ஆண்டு நாங்கள் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றுவதோடு சஜித் பிரேமதாஸவை ஜனாதிபதியாக்குவோம். தேர்தலில் வெற்றிபெறக்கூடியவாறு கீழ்மட்டத்திலிருந்து தேசிய ரீதியில் செயற்திட்டங்களை உருவாக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

கிராமிய ரீதியில் ஐக்கிய மக்கள் சக்தியை மேலும் வலுப்படுத்த வேண்டும். அதனைத் தொடர்ந்து மக்களின் தலைவரான சஜித் பிரேமதாஸ தலைமையில் ஆட்சியமைக்க வேண்டும். எமது குறைபாடுகளைச் சரி செய்து கொண்டு முன்நோக்கிப் பயணிப்பதொன்றே தற்போதைய நோக்கமாக உள்ளது.

அண்மையில் பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்தபோது, அவர் அரசியல் பயணத்தை ஆரம்பித்த விதம் தொடர்பில் கூறினார். அவர் அரசியலுக்குள் பிரவேசித்தபோது எதிர்கொண்ட சவால்கள் மற்றும் தோல்விகள் தொடர்பில் பகிர்ந்துகொண்டமையுடன் தனது தொடர்ச்சியான முயற்சியால் வெற்றிபெற்று, பாகிஸ்தானின் பிரதமராகத் தெரிவானமை பற்றியும் குறிப்பிட்டார். எனவே நாமும் அனைவரையும் ஒன்றிணைத்துக்கொண்டு எமது இலக்கை அடைந்துகொள்வதற்கு முன்நோக்கிப் பயணிப்பதற்குத் தயாராக இருக்கின்றோம். – என்றார்.

# யாழ்.பல்கலைக்கழகத்தில் திங்கள் புதிய மருத்துவ மாணவர் அறிமுகம்







யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் 2019/2020 ஆம் கல்வியாண்டுக்குத் தெரிவு செய்யப்பட்ட 43 ஆவது அணி புதுமுக மாணவர்களுக்கான அறிமுக நிகழ்வும், கற்கை நெறி ஆரம்ப நிகழ்வும் கடந்த திங்கட்கிழமை யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில், மருத்துவ பீடாதிபதி பேராசிரியர் எஸ். ரவிராஜ் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பல்கலைக்கழகத்துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா, பதிவாளர் வி. காண்டீபன், நூலகர் திருமதி எஸ். கல்பனா, சத்திர சிகிச்சைத் துறைத் தலைவர் விசேட வைத்திய நிபுணர் துரைசாமி சர்மா, பல்கலைக்கழக கொரோனாத் தடுப்புச் செயலணியின் தலைவரும், சமுதாயமருத்துவத்துறைசிரேஷ்டவிரிவுரையாளருமானவைத்தியக்கலாநிதிஎஸ். சுரேந்திரகுமாரன், மருத்துவ பீடத்தைச் சேர்ந்த பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், பணியாளர்கள், மருத்துவபீடாதிபதி மாணவர் ஒன்றியத்தின் பிரதிநிதிகள் மற்றும் புதுமுக மாணவர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

மருத்துவ பீடத்தில் கற்கை நெறியை ஆரம்பிக்கும் புதுமுக மாணவர்கள் அனைவரும் இம்மாத முற்பகுதியில் மாணவர் விடுதிகளில் அனுமதிக்கப்பட்டு, தனிமைப் படுத்தப்பட்டு, கடந்த வாரம் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட பின்னரே வகுப்புக்கு வருவதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

# வீட்டாரின் கவனவீனத்தினால் ஒரு வயது குழந்தை சாவு!

கல்கிரியாகம – ஆடியாகல பகுதியிலுள்ள வீடொன்றில், நிர்மாணிக்கப்பட்டிருந்த மீன் தொட்டிக்குள் தவறி விழுந்த குழந்தையொன்று உயிரிழந்துள்ளது.

கடந்த திங்கட்கிழமை மாலை இடம்பெற்ற இந்த சம்பவத்தில், ஒரு வயதுடைய குழந்தையே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் இடம்பெற்றவேளையில் வீட்டில் அனைவரும் இருந்துள்ளமையுடன், வீட்டாரின் கவனவீனத்தால் இந்த விபத்து நேர்ந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்நிலையில் சம்பவம் தொடர்பாக கல்கிரியாகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ரஞ்சனின் நாடாளுமன்ற ஆசனம் விடயத்தில் கால அவகாசம் நீடிப்பு

கொழும்பு, மார்ச் 17

ரஞ்சன் ராமநாயக்கவின் நாடாளுமன்ற ஆசனம் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதை தவிர்க்கும் வகையில் வழங்கப்பட்ட உத்தரவு மார்ச் 19 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

சிறைவாசம் காரணமாக தனது நாடாளுமன்ற ஆசனத்தை நீக்குவதைத் தடுக்க இடைக்கால தடை உத்தரவு கோரி ரஞ்சன் ராமநாயக்க மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

குறித்த மனு நேற்று (செவ்வாய்க்கிழமை) மேன்முறையீட்டு நீதிமன்ற தலைமை நீதியரசர் அர்ஜுன ஒபயசேகர தலைமையிலான நீதிமன்ற அமர்வு முன்னிலையில் மீண்டும் விசாரணைக்கு வந்தபோதே குறித்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டில் ஜனவரி 12 ஆம் திகதி நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு நான்கு ஆண்டுகள் கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மக்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்க நயவஞ்சகம் செய்துள்ளது கூட்டமைப்பு!

## மக்கள் முன்னணிப் பிரமுகர்



பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்கும் விடயத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் நயவஞ்சக போக்கினை கடைப்பிடித்துள்ளார் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஷ் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டம் பாண்டிருப்பு பகுதியில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் (திங்கட்கிழமை) மாலை இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர் –

ஜெனிவா கூட்டத்தொடரில் சில நாடுகளால் வரைவு ஒன்று கொண்டுவரப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கில் 10 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் தெரிவாகினர். அந்த வகையில் இவர்கள் சொல்வதைத்தான் உலகம் ஏற்கும்.

தற்போது அந்த வரைவுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் உடன்பட்டுள்ளார். இது பாதிக்கப்பட்ட மக்களுக்கு மீண்டும் ஒரு பச்சத்துரோகத்தையும் நயவஞ்சகத்தையும் கூட்டமைப்பின் தலைவர் செய்துள்ளார்.

தமிழ் மக்களாகிய நாங்கள் இனிமேலும் விழிக்காதுவிட்டால் எங்கள் தமிழ் மக்களை காப்பாற்றுவது கேள்விக்குறியாகிவிடும்.

இனியாவது தமிழ் சமூகம் விளங்கிக்கொள்ள வேண்டும். உண்மையான தலைவராகவும் நேர்மையான தலைவராகவும் யார் உள்ளார் என்பதை நாம் அறிய வேண்டும்.

இறுதி யுத்தத்தின் பின்னர் தமிழ்த் தேசிய அரசியலை குழிதோண்டிப் புதைக்கும் விதமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நடவடிக்கை இருந்தது.

இதனால்தான் 2010 ஆம் ஆண்டளவில் அதில் இருந்து விலகி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என்ற பெயரில் தமிழ் தேசிய அரசியலை தக்க வைத்து வந்துள்ளோம். எனத் தெரிவித்தார்.

# போலி நாணயத் தாள்களுடன் மூவர் அக்கரைப்பற்றுப் பகுதியில் கைது!



அக்கரைப்பற்று, நிந்தவூர் பகுதியில் அமைந்துள்ள வீடொன்றிலிருந்து போலி நாணயத்தாள்களுடன் மூவரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்கள் மூவரும் 45 வயதுக்கு மேற்பட்டவர்கள் ஆவர்.

அக்கரைப்பற்று பொலிஸார் அந்தப் பகுதியில் அமைந்துள்ள வீடொன்றில் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின்போதே 6 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான 5 ஆயிரம் ரூபா போலி நாணயத்தாள்கள் மீட்கப்பட்டுள்ளன.

அத்துடன் இந்த சுற்றிவளைப்பின்போது நாணயத்தாள்கள் அச்சிடப் பயன்படுத்தப்படும் இயந்திரம், மை, பேப்பர் என்பனவும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந் நிலையில் சந்தேக நபர்களை மேலதிக விசாரணைகளுக்காக குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கவும் அக்கரைப்பற்று பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# புரெவி புயல் பாதித்த இரணைதீவு – இறங்கு துறையை மீள் அபிவிருத்தி செய்து தருமாறு மக்கள் கோரிக்கை!



கிளிநொச்சி – இரணைதீவு, இறங்கு துறை புரெவி புயலால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அதனை மீள் அபிவிருத்தி செய்து தருமாறும் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

பூநகரி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட இரணைதீவுப் பகுதியில் புதிதாக சர்வதேச நிறுவனம் ஒன்றால் மேற்கொள்ளப்பட்ட இறங்குதுறை அபிவிருத்தி பல மில்லியன் ரூபா செலவில் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

குறித்த அபிவிருத்திப் பணிகள் நிறைவடைந்து மக்கள் பயன்பாட்டுக்காக கையளிக்கப்பட்டிருந்த நிலையில், கடந்த வருடம் இடம்பெற்ற புரெவி புயலின் தாக்கத்தால் அது முழுமையாகச் சேமடைந்துள்ளது.

நடை பாதைக்காக அமைக்கப்பட்டிருந்த கொங்கீறீட்டுகளும் புரெவி புயலால் முழுமையாக சேதமடைந்து இன்று மக்கள் பயன்படுத்த முடியாத நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டு குறித்த பகுதியில் மீள்குடியேறிய மக்களின் பயன்பாட்டுக்காக சர்வதேச நிறுவனம் ஒன்றால் அமைக்கப்பட்ட குறித்த இறங்குதுறை தரமான கட்டுமானப் பணிகள் இடம்பெற்றிருந்தாலும், இயற்கை அனர்த்தத்தால் முழுமையாக இன்று அழிவடைந்து காணப்படுவதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த கட்டுமான பணிக்காக தமது மீன்பிடி வள்ளங்களும் பயன்படுத்தப்பட்டு அதிலிருந்து கட்டுமானப் பொருள்கள் எடுத்துவரப்பட்டன எனவும் முழுமையான பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட்ட குறித்த அபிவிருத்தி இன்று பயன்படுத்த முடியாத நிலைக்குத்தள்ளப்பட்டுள்ளதாகவும் அவர்கள் கவலை வெளியிடுகின்றனர்.

இறங்குதுறையை மீள் அபிவிருத்தி செய்து, மக்களின் பயன்பாட்டுக்காகவும் தமது பொருளாதார மேம்பாட்டுக்காகவும் அபிவிருத்தி செய்து தருமாறு மக்கள் கோரிக்கை முன்வைக்கின்றனர்.

# இளம் தம்பதி கைக் குழந்தையுடன் வத்தளையில் சந்தேகத்தில் கைது!

வத்தளை – ஹேக்கித்த வீதியில் உள்ள கத்தோலிக்க தேவாலயம் ஒன்றின் அருகே சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடினர் எனக் கூறப்படும், திருகோணமலை – மூதூர் பகுதியைச் சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்படும் இளம் தம்பதியினரை வத்தளை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இரண்டரை வயது கைக் குழந்தையுடன் குறித்த தம்பதியினர் சந்தேகத்துக்கு இடமான முறையில், ஹேக்கித்த வீதியில் அமைந்துள்ள கத்தோலிக்க தேவாலயம் ஒன்றுக்கு அருகே நடமாடிய போது இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது.

கடந்த திங்கட்கிழமை இரவு 11.30 மணியளவில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளமையுடன், கைது செய்யும் போது அவர்களது ஆள் அடையாளம், வதிவிடம் உள்ளிட்ட எந்த தகவல்களையும் உறுதி செய்ய எந்த ஆவணமும் அவர்களிடம் இருக்கவில்லை என வத்தளை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நிலையிலேயே அவர்களைக் கைது செய்து பொலிஸ் நிலையம் அழைத்து சென்றனர் எனக் கூறும் பொலிஸார், அவர்கள் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர் எனக் குறிப்பிட்டுள்ளனர்.

குறித்த இளம் தம்பதியினரிடம், தேசிய உளவுச் சேவை, பொலிஸ் விஷேட நடவடிக்கை பிரிவு, மேல் மாகாண உளவுச் சேவை உள்ளிட்ட புலனாய்வு அமைப்புக்களும் விஷேட விசாரணைப் பிரிவுகளின் அதிகாரிகளும் வத்தளை பொலிஸ் நிலையத்திற்கு சென்று விசாரணை செய்துள்ளனர்.

விசாரணைகள் நிறைவடையாத நிலையில், ஆள் அடையாளத்தை உறுதி செய்ய தவறிய நிலையில் சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட குறித்த இளம் தம்பதி வத்தளை பொலிஸ் நிலையத்தில் தொடர்ந்தும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர்.

## கொரோனாவிலிருந்து குணமடைந்த வயோதிபர் மன்னாரில் உயிரிழப்பு!

மன்னாரில் கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டு சிகிச்சை பெற்று குணமடைந்த வயோதிபர் ஒருவர், மீண்டும் சுகவீனம் காரணமாக மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார் என அந்த மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் த.விநோதன் தெரிவித்தார்.

மன்னாரில் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் அலுவலகத்தில் கடமையாற்றிய 86 வயதுடைய வயோதிபர் ஒருவரே, கடந்த திங்கட்கிழமை மதியம் இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்த வயோதிபருக்கு ஏற்கனவே கொரோனாத் தொற்று உள்ளமை அடையாளம் காணப்பட்ட நிலையில், வயோதிபர் தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டு குணமடைந்த நிலையில், மீண்டும் வீடு திரும்பியுள்ளார்.

மேலும் அவர், சுகவீனம் ஏற்பட்ட நிலையில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, கடந்த சில தினங்களாக சிகிச்சை பெற்று வந்த நிலையில், திங்கள் மதியம் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# பாவனையாளர் அதிகார சபையால் வவுனியாவில் விழிப்புணர்வு!



சர்வதேச பாவனையாளர் உரிமைகள் தினத்தை முன்னிட்டு தலைக்கவசத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையில் விழிப்புணர்வு நிகழ்வு ஒன்று வவுனியாவில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது மோட்டார் சைக்கிள் செலுத்தும் போது தரமான தலைக்கவசங்களை பயன்படுத்துவதன் அவசியம் தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

குறிப்பாக வவுனியா மாவட்டத்தின் நகர் பகுதியில் இது தொடர்பான விவரங்களை உள்ளடக்கிய துண்டுப்பிரதிகள் விநியோகிக்கப்பட்டதுடன், போக்குவரத்து பொலிஸாரின் ஒத்துழைப்புடன் மோட்டார் சைக்கிளில் பயணிப்போருக்கு இந்த விடயம் தொடர்பாக அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டன. தலைக்கவச விற்பனை நிலையங்கள் மற்றும் விற்பனை முகவர்களுக்கும் போதுமான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

இதன்போது கருத்து தெரிவித்த பாவனையாளர் அதிகாரசபையின் வவுனியா மாவட்ட பொறுப்பதிகாரி நிலாந்தன் –

2015 ஆம் ஆண்டு ஜூலை 16 ஆம் திகதி 1923/65 ஆம் இலக்க அரசாங்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் பாதுகாப்பு தலைக்கவச தயாரிப்பாளர்கள், இறக்குமதியாளர்கள், விநியோகஸ்தர், அல்லது வியாபாரிகளும் தலைக்கவசம் தொடர்பான இலங்கை கட்டளைகள் நிறுவனத்தால் வழங்கப்பட்ட உரிய எஸ்.எல்.எஸ். உற்பத்தி சான்றுப்படுத்தல் குறியீட்டைக் கொண்ட தலைக்கவசங்களையே கட்டாயமாக விநியோகிக்கவும் விற்பனை செய்யவும், காட்சிப்படுத்தவும் முடியும்.

எனவே பொதுமக்களும் அனுமதிக்கப்பட்ட தலைக்கவசங்களை அணிவதை ஊக்குவிக்கும் வகையில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதை மையமாகக் கொண்டு இந்த வருட பாவனையாளர் உரிமைகள் தினம் அனுஷ்டிக்கப்படுகிறது. தலைக்கவசம் ஓர் உயிர்க்கவசம் என்றவகையில் அனுமதிக்கப்பட்ட தலைக்கவசங்களைப் பயன்படுத்துவதன் மூலம் ஏதேனும் விபத்துகள் இடம்பெற்றாலும் ஏற்படக்கூடிய பாதிப்புக்களை கட்டுப்படுத்த முடியும்.

முக்கியமாக எஸ்.எல்.எஸ். சான்று பெற்ற அங்கீகரிக்கப்பட்ட தலைக்கவசம் உறுதியானது மாத்திரமின்றி அதிர்வுகளை தாங்கக்கூடிய விதத்தில் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக பொதுமக்களும் பொறுப்புடன் நடந்து கொள்வது வரவேற்கத்தக்கது. – என்றார்.

## சஹ்ரானின் சகோதரி உட்பட 64 பேருக்கு விளக்கமறியல்!

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக காத்தான்குடி பிரதேசத்தில் கைது செய்யப்பட்ட சஹ்ரானின் சகோதரி உட்பட 64 பேரையும் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

காணொளி மூலம் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் நீதிவான் ஏ.சி.ஏ றிஸ்வான் முன்னிலையில் இந்த வழக்கு கடந்த திங்கட்கிழமை விசாரணைக்கு வந்தபோதே அவர்களை எதிர்வரும் 29 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

சஹ்றான் குழுவோடு தொடர்புடைய குற்றச்சாட்டிலும் அம்பாந்தோட்டை, நுவரெலியா போன்ற இடங்களுக்கு பயிற்சிக்காக சென்றார்கள் என்ற சந்தேகத்தின் பேரிலும் காத்தான்குடியைச் சேர்ந்த 63 பேர் கைது செய்யப்பட்டனர்.

இவர்களில் 5 பேர் பிணையில் விடுவிக்கப்பட்ட நிலையில் 58 பேர் தொடர்ந்தும் விளக்கமறியல் வைக்கப்பட்டுள்ளனர்.

அதன்படி சஹ்ரானின் சகோதரி மற்றும் அவரின் கணவர், சியோன் தேவாலய தற்கொலை குண்டுத் தாக்குதலை மேற்கொண்ட ஆசாத்தின் தாயார், குண்டுதாரிக்கு பஸ் ஆசனப் பதிவு செய்த சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட 6 பேர் உட்பட 64 பேரும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

## பாவனையாளர் அதிகார சபையால் திருகோணமலையில் விழிப்புணர்வு!



சர்வதேச பாவனையாளர்கள் உரிமைகள் தினத்தை முன்னிட்டு திருகோணமலை மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை பிரிவு ஏற்பாடு செய்த விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம் கடந்த திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற் பகல் 3 மணி வரை திருகோணமலை மட்டிக்களி பிரதேசத்தில் நடைபெற்றது.

பாவனையாளர் உரிமைகள், பாவனையாளர் சட்டங்கள் உள்ளடங்கிய துண்டுப்பிரசுரங்கள் வீதியால் பயணித்த பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டன.

அத்துடன் எஸ்.எல்.எஸ். தரச்சான்றிதழ் உடைய தலைக்கவசம் உள்ளதா என்பது தொடர்பில் வீதியால் பயணித்த மோட்டார் சைக்கிள் பயணிகளிடம் பரீட்சித்து பார்க்கப்பட்டது.

தாம் தலைக் கவசங்களை வாங்கும் பொழுது கட்டாயமாக எஸ்.எல்.எஸ். தரச்சான்றிதழ் இருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாத வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க அது தொடர்பான தகவல்களை மாவட்ட பாவனையாளர் பிரிவிற்கு வழங்குமாறு இதன்போது உரிய அதிகாரிகளால் தெளிவுபடுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் மாவட்ட பாவனையாளர் அதிகார சபை பிரிவின் பொறுப்பதிகாரி உட்பட உத்தியோகத்தர்கள் மற்றும் போக்குவரத்து பொலிஸாரும் கலந்து கொண்டனர்.

# நீண்டகால நீதிமன்ற செயற்பாடுகள்; பல பில்லியன் ரூபா வரி நிலுவை!

### கணக்காய்வுக் குழு முன் தகவல்





நிலுவையில் உள்ள வரியை வசூலிப்பது தொடர்பான நீண்டகால நீதிமன்ற செயற்பாடு மற்றும் வழக்குகள் காலம் தாழ்த்தப்படுவதால் பல வருடங்களுக்கான பல பில்லியன் ரூபா பெறுமதியான வரியை அறவிடமுடியாதிருப்பதாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் எச்.எம்.சீ.பண்டார நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

இறைவரித் திணைக்களம் அண்மையில் அரசாங்க கணக்குகள் பற்றிய குழு (கோபா குழு) முன்னிலையில் அழைக்கப்பட்டிருந்தபோதே அவர் இந்தத் தகவலை முன்வைத்தார். வரி ஏய்ப்பு செய்பவர்கள் தமது நிலுவை வரியைச் செலுத்தாதிருப்பதற்கு நீதித்துறை செயற்பாட்டின் காலதாமதங்களை சாதகமாகப் பயன்படுத்தப்படுவதும் இங்கு புலப்பட்டது.

இதுபோன்ற தாமதங்களைத் தடுத்து, நிலுவை வரி தொடர்பான வழக்கு செயற்பாடுகளைத் துரிதப்படுத்துவதன் அவசியத்தைச் சுட்டிக்காட்டிய கோபா குழு, இது தொடர்பில் நீதி அமைச்சு, நிதி அமைச்சு மற்றும் இறைவரித் திணைக்களம் ஆகியவற்றை விரைவில் கலந்துரையாடலொன்றுக்கு அழைக்கவிருப்பதாகவும் தெரிவித்தது.

அத்துடன், வரி வசூலிக்கும் நடைமுறையை மேலும் நெறிமுறைப்படுத்தவும், விரைவுபடுத்தவும் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும், தேவை ஏற்படின் சட்டத்தில் திருத்தங்களைக் கொண்டுவர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண குறிப்பிட்டார்.

வரிசெலுத்த வேண்டியோரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவை வரி மற்றும் தண்டப்பணம் தொடர்பான விசேட கணக்காய்வு அறிக்கை தொடர்பில் 2021 ஜனவரி 06 ஆம் திகதி நடத்தப்பட்ட கலந்துரையாடலில் வழங்கப்பட்ட பரிந்துரைகளின் முன்னேற்றம் தொடர்பாக ஆராயும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

வரி செலுத்தாது முன்னணியில் இருக்கும் நிறுவனங்கள் மற்றும் அவை செலுத்த வேண்டிய தொகை தொடர்பில் இறைவரித் திணைக்களம் 2021 ஜனவரி 06 ஆம் திகதி நடைபெற்ற கலந்துரையாடலில் முன்வைத்த பட்டியல் பற்றியும் குழு கவனம் செலுத்தியது.

2015 டிசெம்பர் 31 ஆம் திகதி வரையான வரிக் காலப்பகுதியில் சம்பந்தப்பட்ட கோப்புக்கள் வீஹஸி கணினி கட்டமைப்பின் கீழும், 2016ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதலிருந்தான கோப்புக்கள் றாம்ஸ் கணினி கட்டமைப்பின் கீழும் நிர்வகிக்கப்படுவதாகவும், வசூலிக்கப்பட வேண்டியிருப்பதாகக் காண்பிக்கும் வரிப் பெறுமதி உண்மையில் அறவிடப்பட வேண்டிய வரித் தொகை இல்லையென்றும் சுட்டிக்காட்டப்பட்டது. எனவே, வரி நிலுவையைச் செலுத்த வேண்டிய நிறுவனங்கள் குறித்த துல்லியத்தன்மையில் பிரச்சினை காணப்படுவதால், இது சீர் செய்யப்பட வேண்டும் என்றும் குழு, இறைவரித் திணைக்களத்தை வலியுறுத்தியது.

இந்த நிலையில், அதிகப்படியான வரி நிலுவையைக் கொண்டுள்ள நிறுவனங்கள் மற்றும் அவை செலுத்த வேண்டிய வரித் தொகை ஆகியன உள்ளடக்கிய விவரங்களைக் கொண்ட அறிக்கையொன்றை மார்ச் 31ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறும் இக்குழு பரிந்துரைத்தது.

அத்துடன், லீஹஸி கணினிக் கட்டமைப்புக்கு அமைய அறவிடப்பட வேண்டியுள்ள வரி நிலுவையின் பெறுமதி 10,700 கோடி ரூபா என்பதுடன் இதில் 22,400 கோடி ரூபா அறவிடப்பட்டுள்ளன. எஞ்சிய வரி நிலுவை மற்றும் தண்டப்பணத் தொகையை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் குழு, உள் நாட்டு இறைவரித் திணைக்களத்துக்கு பணிப்புரை வழங்கியது.

இக்கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண, நாடாளுமன்ற உறுப்பினர்களான திஸ்ஸ அத்தநாயக்க, நிரோஷன் பெரேரா, எஸ்.சிறிதரன், வைத்தியகலாநிதி கௌரவ உபுல் கலப்பதி, பி.வை.ஜீ.ரத்னசேகர, வீரசுமன வீரசிங்க உள்ளிட்ட உறுப்பினர்களும், அரசாங்க அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

## வெளிநாடுகளில் சிக்கிய 20 ஆயிரம் பேரை நாட்டுக்கு அழைத்து வருவதற்கு நடவடிக்கை!

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக வெளிநாடுகளில் நிர்க்கதியாகியுள்ள மேலும் 20 ஆயிரம் இலங்கையர்கள் நாட்டுக்கு அழைத்துவரப்படவுள்ளனர்.

வெளிநாடுகளில் நிர்க்கதியாகியிருந்த சுமார் 30 ஆயிரம் இலங்கைப் பணியாளர்கள் நாட்டுக்கு அழைத்துவரப்பட்டுள்ளனர் எனத் தொழில்துறை அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், எதிர்வரும் காலங்களில் மேலும் 20 ஆயிரம் பேர் நாட்டுக்கு அழைத்துவரப்படவுள்ளனர் என அவர் தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளில் இருந்து நாடு திரும்புவோரைத் தனிமைப்படுத்துவதற்கான, போதிய இடவசதிகள் இன்மை காரணமாக, இந்தச் செயற்பாடுகளில் தாமதம் ஏற்பட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனை நிவர்த்தி செய்யும் முகமாக, சகல மாவட்டங்களிலும் தலா ஒவ்வொரு விருந்தகமும் தங்குமிட விடுதியையும் அமைக்குமாறு வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்துக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

# சர்வதேச பாவனையாளர் உரிமைகள் தினம்: அம்பாறை மாவட்டத்தில் விழிப்புணர்வு நிகழ்வு!





சர்வதேச பாவனையாளர் உரிமைகள் தினத்தை முன்னிட்டு தேசிய ரீதியில் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை, வீதிப் பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையுடன் இணைந்து நடத்தும் விஷேட நடமாடும் விழிப் புணர்வூட்டல் நிகழ்ச்சித் திட்டம் நாடளாவிய ரீதியில் இடம்பெற்று வருகின்றது.

இதற்கமைய அம்பாறை மாவட்டத்தில் சர்வதேச பாவனையாளர் உரிமைகள் தினத்தை முன்னிட்டு மாவட்டத்தின் பல பகுதிகளில் விழிப்புணர்வு நிகழ்வுகள் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றன.

அம்பாறை மாவட்ட செயலகத்தின் பாவனையாளர் அதிகார சபையின் மாவட்ட பொறுப்பாளர் டி.சுதர்சனின் வழிகாட்டலில், விழிப்புணர்வு நிகழ்ச்சி பிரிவின் அதிகாரி ஸமான் ஸாஜீத் மற்றும் றஸ்லான், சுபையிர், றாபீ தலைமையில் இடம்பெற்றது.

மாவட்ட செயலகத்தின் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினரால், மாவட்ட செயலக முன்றில், அம்பாறை நகரம், கல்முனை பிரதான பொலிஸ் நிலையத்துக்கு முன்னாலும் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் புலன் விசாரணை அதிகாரிகளுடன் மோட்டார் போக்குவரத்து பொலிஸார் இணைந்து விழிப்புணர்வு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன்போது மோட்டார் வாகனம் செலுத்துனர்களின் ‘பாதுகாப்பானதும் தரமானதுமான தலைக்கவசம்’ கொள்வனவு செய்யும் போது கவனிக்க வேண்டிய முக்கிய விடயங்கள் சம்பந்தமாக விளக்கமளிக்கப்பட்டதுடன், விழிப்புணர்வு துண்டுப்பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன.

# 2024 இலும் ஆட்சியைப் பிடிப்பது ராஜபக்ஷாக்களுக்கு பகல்கனவே: மஹிந்தவுக்கு ஏற்பட்ட கதியே கோட்டாவுக்கு என்கிறார் ராஜித

கொழும்பு, மார்ச் 16

2024 ஆம் ஆண்டு ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றுவது என்பது ராஜபக்ஷாக்களுக்கு வெறுமனே பகல் கனவாகவே அமையும்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு 2014 ஆம் ஆண்டு ஏற்பட்ட கதி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு 2024ஆம் ஆண்டு ஏற்படும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி உருவாக்கப்பட்டு ஒருவருடம் பூர்த்தியடைந்துள்ளமையை முன்னிட்டு கடந்த திங்கட்கிழமை கொழும்பு ஹைட்பார்க்கில் மக்கள் கூட்டமொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே ராஜித சேனாரத்ன மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு –

எதிர்வரும் 2024 ஆம் ஆண்டு ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றுவது என்பது ராஜபக்ஷாக்களுக்கு வெறுமனே பகல் கனவாகவே அமையும்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு 2014 ஆம் ஆண்டு ஏற்பட்ட கதி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு 2024ஆம் ஆண்டு ஏற்படும்.

தற்போதைய பலவீனமான அரசாங்கத்தை வீழ்த்துவதற்கு அனைத்துத் தரப்பினரும் ஐக்கிய மக்கள் சக்தியுடன் ஒன்றிணைய வேண்டியது அவசியமாகும்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்து ஒன்றரை வருடம் பூர்த்தியடைந்துள்ள நிலையில் நாட்டுமக்களுக்கு எவ்வித நலன்களும் கிடைக்கப்பெறவில்லை.

அத்தியாவசியப் பொருள்களின் விலைகளை குறைத்த நல்லாட்சி அரசாங்கத்தின் உறுப்பினர்கள் தேசத்துரோகிகளாகவும், அத்தியாவசிய பொருள்களின் விலைகளை ராஜபக்ஷ குடும்பத்தின் உறவினர்களுக்கு மாத்திரம் குறைக்கும் அரசாங்கத்தின் உறுப்பினர்கள் தேசப்பற்றாளர்களாகவும் சித்திரிக்கப்படுகின்றனர்.

அதுமாத்திரமன்றி நாட்டின் பொருளாதாரம் பாரிய நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளது.

இந்தவருட இறுதியில் அத்தியாவசிய பொருள்களின் விலைகள் பெருமளவில் அதிகரிக்கும். எதிர்வரும் சித்திரைப்புத்தாண்டின் போது நாட்டுமக்கள் பாரிய நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்கும் நிலையே தோற்றம் பெறும்.

ஜனாதிபதித்தேர்தல் காலத்தில் வெளிநாட்டில் வாழும் இலங்கையர்களை 'நாட்டின் வீரர்கள்' என்று தற்போதைய அரசாங்கம் கூறியது.

ஆனால் இப்போது ராஜபக்ஷ குடும்பத்தின் உறவினர்களின் வியாபாரங்களுக்காக வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்கள் பயன்படுத்தப்படுகின்றார்கள்.

நாட்டு மக்களுக்கு மாத்திரமன்றி, வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களுக்கும் இந்த அரசாங்கம் துரோகமிழைத்துள்ளது.



பல்வேறு வழிமுறை ஊடாக அரசநிதி மோசடி செய்யப்படுகிறது. முஸ்லிம் வியாபாரிகள் ஊடாக நிதிமோசடிகளில் ஈடுபடும்போது மாத்திரம் அரசாங்கம் பௌத்த தேசியவாதம் தொடர்பில் பேசுவதில்லை.

ஆனால் முஸ்லிம் மற்றும் சிங்கள மக்கள் நல்லிணக்கத்துடன் வாழும்போது மாத்திரம் அரசாங்கம் அதனை விரும்பவில்லை. அதுமாத்திரமன்றி ஜனாதிபதி இனவாதத்தை முன்னிறுத்தியே அரசநிர்வாகத்தை முன்னெடுத்துச் செல்கிறார்.

நாட்டுமக்கள் அனைவரையும் இணைத்துக் கொண்டு, அரசாங்கத்திற்கு எதிராக ஒன்றிணைந்து போராடுவதற்கு நாம் தயாராக இருக்கின்றோம்.

அரசாங்கத்துக்கு எதிராக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களை ராஜபக்ஷாக்கள் தமது அதிகாரத்தைப் பிரயோகித்து முடக்குகிறார்கள். எனினும் நாம் இதற்கு ஒருபோதும் அடிபணிய மாட்டோம். – என்றார்.

# ஷரீஆ சட்டத்தைப் பின்பற்றுவதற்கு சவுதி செல்ல வேண்டியதில்லை!

## அஸாத் சாலி தெரிவிப்பு



ஷரீஆ சட்டத்தை பின்பற்றவேண்டுமாக இருந்தால் சவூதி அரேபியாவுக்கு போக வேண்டிய தேவையில்லை.

நாடுசுதந்திரமடைவதற்குமுன்பிருந்தே அனைத்து இன மக்களுக்குமான தனியார் சட்டங்கள் நாட்டில் அமுலில் இருக்கின்றன.

அத்துடன் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விசாரணை அறிக்கையில் அரசாங்கம் எதிர்பார்த்தவர்களுக்கு எதிராக எந்த குற்றச்சாட்டும் தெரிவிக்கப்படவில்லை.

அதனால் முஸ்லிம்களின் மீது பழி சுமத்தி திசைதிருப்பும் நடவடிக்கையை அரசாங்கம் ஆரம்பித்துள்ளது என தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அஸாத் சாலி தெரிவித்தார்.

இலங்கை மக்கள் நாட்டு சட்டத்தையே பின்பற்றவேண்டும். அஸாத் சாலி ஷரீஆ சட்டத்தை பின்பற்றுவதாக இருந்தால் சவுதி அரேபியாவுக்கு செல்லவேண்டும் என அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்திருந்த கருத்துக்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் –

எமது நாட்டில் வாழும் அனைத்து இன மக்களுக்கும் அவர்களுக்குரிய தனியார் சட்டங்கள் ஒல்லாந்தர் காலம் முதல் இருந்து வருகின்றன.

சிங்கள மக்களுக்கு கண்டிய சட்டம், இந்துக்களுக்கு தேசவழமைச் சட்டம் முஸ்லிம்களுக்கு முஸ்லிம் தனியார் சட்டம் என நாடு சுதந்திரம் பெற்று 73 வருடகாலமாக எந்த பிரச்சினையும் இல்லாமல் இந்த சட்டங்களைப் பின்பற்றி வருகின்றோம். அதனால் ஷரீஆ சட்டத்தை பின்பற்றுவதற்கு சவுதி அரேபியாவுக்கு செல்லவேண்டியதில்லை.

அத்துடன் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்ற பின்னர்தான் முஸ்லிம் தனியார் சட்டத்தில் மாற்றங்களை மேற்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கைகள் வந்தன.

தாக்குதலுக்கும் முஸ்லிம் தனியார் சட்டத்துக்கும் எந்த தொடர்பும் இல்லை. என்றாலும் தனியார் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு தேவை என்றிருந்தால் அதனை முறையாக செய்யலாம்.

அவ்வாறு இல்லாமல் புர்காவை தடை செய்வோம் மத்ரஸா பாடசாலைகளை இல்லாமலாக்குவோம் என அரசாங்கம் நினைத்த பிரகாரம் செய்ய முடியாது. அரசாங்கம் இதனை பலாத்காரமாக செய்ய முற்படும்போதுதான் தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றன.

மேலும் அரசாங்கம் புர்காவை தடை செய்வதன் மூலம் நாட்டில் அடிப்படைவாத பிரச்சினைகள் இல்லாமல் போகுமா என நாங்கள் கேட்கின்றோம்.

உயிர்த்த ஞாயிறுதாக்குதல் இடம்பெற்ற பின்னர் அரசாங்கம் முஸ்லிம் அரசியல் தலைவர்கள் சிலருக்கு எதிராக பொய் பிரசாரங்களை மேற்கொண்டு வந்தது. ஆனால் விசாரணை அறிக்கையில் அரசாங்கம் எதிர்பார்த்த யாருடைய பெயரும் அதில் இல்லை.

அதேபோன்று தாக்குதலின் பிரதான சூத்திரதாரிகளையும் தேடிக்கொள்ள முடியாமல் போயிருக்கின்றது. தற்போது சிங்கள மக்களை ஏமாற்றவே புர்காவை தடை செய்ய அமைச்சர் சரத் வீரசேகர நடவடிக்கை எடுத்திருக்கின்றார்.

அத்துடன் நாட்டு சட்டத்தை மதிக்கப் போவதில்லை என நான் தெரிவித்தேன் எனத் தெரிவித்து என்னைக் கைதுசெய்வதாக அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

என்னைக் கைதுசெய்வது தொடர்பில் நான் அலட்டிக்கொள்ளப்போவதில்லை. கைதுசெய்தாலும் நீதிமன்றத்தில் என்னை ஆஜர்படுத்தவேண்டும்.

அம்பாறையில் இடம்பெற்ற முஸ்லிம்களுக்கு எதிரான பிரச்சினையை சரத் வீரசேகரதான் திட்டமிட்டு மேற்கொண்டார் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்த குரல் பதிவு என்னிடம் இருக்கின்றது. இனங்களுக்கடையில் பிரச்சினையை ஏற்படுத்தியமை தொடர்பில் அவருக்கு எதிரான ஆதாரங்களையும் நீதிமன்றத்துக்கு சமர்ப்பிப்போம் – என்றார்

# பொலிஸார் சிறப்பு நடவடிக்கை ஞாயிறு 3,108 பேர் கைதாகினர்!

கொழும்பு, மார்ச் 17

நாடு முழுவதும் கடந்த ஞாயிற்றுக்கிழமை முன்னெடுக்கப்பட்ட சிறப்பு நடவடிக்கையில் 3 ஆயிரத்து 108 நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

16 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொலிஸ் அதிகாரிகள் இந்த சோதனை நடவடிக்கையின் ஒரு பகுதியாக இருந்தனர் என பிரதிப் பொலிஸ்மா அதிபரும், பொலிஸ் ஊடகப் பேச்சாளருமான அஜித் ரோஹண குறிப்பிட்டார்.

இதன்போது பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 1,112 நபர்களும், 454 வாகனசாரதிகளும்கைதுசெய்யப்பட்டவர்களில் உள்ளடங்குவர்.

அதேநேரம் போதைப்பொருள் வைத்திருந்தமைக்காக 469 நபர்களும், கலால் கட்டளைச் சட்டத்தை மீறியதற்காக 523 நபர்களும் இந்த நடவடிக்கையின் போது கைது செய்யப்பட்டவர்களில் அடங்குவர்.

நாட்டில் சட்டம் ஒழுங்கை பராமரிக்க வாரந்தோறும் அல்லது இரண்டு வாரங்களுக்கு ஒரு முறையோ இவ்வாறான விசேட நடவடிக்கைகளை மேற்கொள்வோம்.

பாதுகாப் பான நாட்டை உறுதி செய்வதற்காக இதுபோன்ற நடவடிக்கைகளுக்கு பொது மக்கள் பொலிஸாருக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் கேட்டுக் கொண்டார்.

இதேவேளை, நாடளாவிய ரீதியில் ஞாயிறுக்கிழமை 4 மணித்தியாலங்கள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட விசேட சுற்றிவளைப்புக்களில் 3 ஆயிரத்துக்கும் அதிக சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளமையோடு, போக்குவரத்து விதிமீறல்கள் தொடர்பில் 5 ஆயிரம் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன எனப் பொலிஸ்பேச்சாளர் பிரதிபொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில் –

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை நாடளாவிய ரீதியில் விஷேட சுற்றிவளைப்புக்கள் முன்னெடுக்கப்பட்டன. இந்த சுற்றி வளைப்புக்களில் 16,524 பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டதுடன், 3,108 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

அதற்கமைய பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த 1 அ112 சந்தேக நபர்கள், தேடப்பட்டுவந்த 108 சந்தேகநபர்கள், வெவ்வேறு சந்தேகங்களின் அடிப்படையில் 639 சந்தேகநபர்கள், போதைப்பொருளுடன் தொடர்புடைய 469 சந்தேகநபர்கள், சட்டவிரோத மதுபான உற்பத்தி தொடர்பில் 523 சந்தேகநபர்கள் மற்றும் மதுபோதையில் வாகனம் செலுத்திய 454 சந்தேகநபர்கள் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். இவை தவிர வெவ்வேறு போக்குவரத்து விதிகளை மீறிய நபர்கள் தொடர்பில் 5,380 வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தொடர்ச்சியாக இது போன்ற விசேட சுற்றி வளைப்புக்கள் முன்னெடுக்கப்படும். எனவே பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ள சந்தேக நபர்கள் அது தொடர்பில் அறிந்திருந்தால் உடனடியாக நீதிமன்றத்தில் அல்லது பொலிஸ் நிலையத்தில் முன்னிலையாக வேண்டும். அவ்வாறில்லை என்றால் பொலிஸாரால் கைது செய்யப்படும்பட்சத்தில் அவர்கள் நீதிமன்றத்தை புறக்கணித்தமை தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்படுவர்.

போதைப்பொருள் தொடர்பான சுற்றிவளைப்புக்களும் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும். இதன் போது கைது செய்யப்படும் சந்தேகநபர்கள் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படுவர்.

வாராந்தம் அல்லது இரு வாரங்களுக்கொருமுறை இவ்வாறான சுற்றி வளைப்புக்களை முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாட்டு மக்களுக்கு அச்சமின்றி வாழக் கூடிய சூழலை உருவாக்குவதற்காகவே இலங்கை பொலிஸ் இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுக்கிறது. மக்களின் நன்மை கருதி முன்னெடுக்கப்படும் இவ்வாறான செயற்பாடுகளுக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று கோருகின்றோம். – என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

ஈழ மக்கள் ஜனநாயக்க கட்சியின் செய லாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா கடந்த 27 ஆண்டுகளாகத் தொடர்ந்து யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி வகித்து வருகின்றார். பத்தாண்டுகளுக்கு மேல் அமைச்சராக இருக் கின்றார். ஓர் ஆயுதப் போராளியாகக் களத்தில் இறங்கிய அவரின் கடந்த காலத்தை ஓர் அரசியல் அவதானியாக நோக்குகின்றார் சட்டத்தரணி செ. ரவீந்திரன். பல பழைய சம்பவங்களையும், நிகழ்வுகளையும் அவர் அசை போடுகின்றார். சில தினங்களுக்கு இக்கட்டுரை தொடராக வெளிவரும்.

இது பற்றிய வாசகர்களின் அவதானிப்பு - பிரதிபலிப்பு - கருத்துத் தெறிப்பு ஆகிய வற்றை கட்டுரையின் இறுதியில் பிரசுரிக் கலாம் எனக் கருதுகிறோம்.

வாசகர்கள் சுதந்திரமாகத் தமது கருத் துக்களை முன் வைக்கலாம்.

- ஆசிரியர் -

# சாணக்கியத்தை இழந்து இணங்கிய அரசியலில் டக்ளஸின் வகிபாகம்



## ஒரு நடுநிலைப் பார்வை

### அங்கம் - 01

சட்டத்தரணி செ. ரவீந்திரன்
(ஆஸ்திரேலியா)

நந்தவம்சத்தால் முற்றாக அழிக்கப்பட்ட மௌரிய வம்சத்தில், தப்பிய சிறுவன் சந்திரகுப்தன் தலைமறைவாக வாழ்ந்து, மீண்டும் தனது அரசுரிமையை எப்படிப் பெற்றான் என்பது ஒரு வரலாறு.

அதே நந்தவம்சத்தால் அவமானப் படுத்தப்பட்ட சாணக்கியர், நந்த வம்சத்தி னரை வீழ்த்துவதே தனது இலட்சியம் என்றிருந்தவர்.

சந்திரகுப்தன், சாணக்கியரை அணுகி, நந்தவம்சத்தை அழிக்கும் பணியில் தனக்கு உதவுமாறு கேட்டமையுடன், அவரது புத்திமதியின் வழியில் நடக்கவும் தயாரானான்.

சாணக்கியர், சந்திரகுப்தனுக்கு அரசி யல் என்றால் என்ன..?, ராஜாவாக வேண் டும் என்றால் யாரையெல்லாம் பக்கத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்?, யாரை யெல்லாம் தூரத்தில் வைக்க வேண்டும்?,



**செய்திகள்தான் அரசியலுக்கு முக்கியம் – சாணக்கியர் அன்று சொன்னது !**
**நேற்றைய செய்திதான் நாளைய வரலாறு ஊடகங்கள் இன்று சொல்வது !**

யார் பேச்சைக் கேட்க வேண்டும்..? - முத லான புத்திமதிகளைக் கூறினார்.

அவர் சந்திரகுப்தனிடத்தில், "நீ திடீ ரென மக்கள் முன்தோன்றக் கூடாது, முத லில் நீ இன்னமும் உயிருடன் இருக்கிறாய் என்ற செய்தியை மக்களுக்கு பரப்பவேண் டும், அதன் பின்பு உன்னை இங்கு பார்த் தோம், அங்கு பார்த்தோம், எதிர்பாராத விதத்தில் தோன்றினார், அப்படி இருந்தார், இப்படி இருந்தார் என்ற ஊகங்களின் அடிப்படையில் செய்திகளை அறிந்தவர் மூலம் பரப்பவேண்டும். ஏனெனில், செய் திகள்தான் அரசியலுக்கு முக்கியம். மக் கள் உனது வரவை எதிர்பார்க்கிறார்கள், உனக்கு ஆதரவு தருவார்கள் என்பதை தெரிந்து கொண்டுதான், சரியான நேரத்தில் நீ வெளிப்பட வேண்டும் - என்றார்.

பின்னர், மக்கள் மத்தியில் அந்த உத்தி களைப் பயன்படுத்தி ஆர்வத்தை எழுப் பிவிட்டு, சந்திரகுப்தனைப் பாதுகாக்க நீங்கள் லட்சக் கணக்கில் திரண்டு வர வேண்டும், அப்படி செய்வீர்களா, அப்படி வருவீர்கள் என்றால் அவனைக் கொண்டு வருவேன் என்று கூறி, அவர்களிடம் அந்த ஆர்வத்தை படிப்படியாக வளர்த்து, சந்திரகுப்தனை களத்தில் இறக்கி, நந்த வம்சத்தை வீழ்த்தி, தனது இலட்சியத்தை யும் சாணக்கியர் அடைந்தார்.

இந்த வரலாற்றின் அடிப்படையில் தான் பெருமளவில் ரசிகர்களின் ஆதரவும் வசூலும் பெற்ற பாகுபலி திரைப்படம் அமைந்தது.

ஓரளவில் இந்த உத்திகளையே சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த்தும் தான் அரசியலுக்கு வரு வேன், எப்பொழுது வருவேன், இப்பொழுது சொல்ல முடியாது, மக்கள் கேட்கும்போது வருவேன் என்று அடிக்கடி சொல்லி, தனது வரவை மக்கள் எதிர்பார்க்கிறார்கள் என்பதை தெரிந்து கொண்டு அவர்களின் ஆவலைத் தூண்டி, தனது சாணக்கியர் களான ஆலோசகர்களின் புத்திமதிகளோடு களத்தில் இறங்க முயற்சித்தார். இப்போது திடீரென, அரசியலிலிருந்து விலகி நிற்கி றேன், சுகவீனத்தால் ஒதுங்குகிறேன் - என்று பரப்புரை தருகிறார்.

இந்த உத்திகளெல்லாம் புலிகள் தரப் பிலும் பிரபாகரனை முன்வைத்து நடத் தப்பட்டு, அவர் ஒரு அதிஷ்ட விடுதலை நாய கனாக வடிவமைக்கப்பட்டு, மக்கள் மத்தி யில் பல செய்திகளால் உலாவவிடப்பட்டார்.

அந்த வடிவமைப்புக்கு பிரபாகரனிடம் ஓர் ஆளுமைப் பண்பும் இலட்சியப்பற் றும் அர்ப்பணிப்பும் இருந்தது.

அவர் மறைந்து வாழ்ந்தாலும், எப்ப டியாக வாழ்கிறார், புலிகள் அவரை எவ்வ ளவு பாதுகாப்பில் வைத்திருக்கிறார்கள், அவரை அணுகுவது எவ்வளவு சிரமம் என்ற செய்திகளால் அவர்தான் எங்களது ஒரே தலைவன், அவர் பாதுகாக்கப்பட வேண்டிய பொக்கிஷம் என்ற எதிர்பார்ப்பு களுக்கு முத்திரை குத்தப்பட்டது.

இவையெல்லாம் யதார்த்தத்தை மிஞ் சிய ஊதப்பட்ட பிம்பங்கள் போன்று ஒரு கதாநாயக வழிபாட்டின் அடிப்படையில் நடந்தவை.

சிங்கள அரசுக்கும் சிங்கள மக்களுக் கும் இந்தச்செய்திகள் கிலியைக் கொடுத் தன என்பதை மறக்க முடியாது. பிரபாகர னது பெயர் இன்றைக்கும் அவர்களை அந்தக் கிலியால் ஆட்டிப்படைக்கிறது என்பதும் உண்மை.

ஆனால், இறுதிக் கட்டப் போரில் மக் கள் கொத்து கொத்தாக மடிந்தார்கள். அந்த மக்கள் பிரபாகரனையோ புலிக ளையோ பாதுகாக்க இலட்சக்கணக்கில் முள்ளிவாய்க்காலில் திரண்டு நின்று போரிட்டு, அதனால் மரணிக்கவில்லை. இரு பக்கத்து வியூகங்களுக்குள்ளும் அகப்பட்டவர்கள். பிரபாகரனும் அவருடன் சென்றோரும் போர் வலயத்தை விட்டு வெளியேறி பாதுகாப்பாக இன்னுமொரு பிரதேசத்திற்குப் போக எத்தனித்த நேரத் தில் ஏற்பட்ட மோதலில் இறந்தார்கள் என்ற பரப்புரைகள் இருக்கின்றன.

அவர் சாகவில்லை, தக்க தருணத் தில் வருவார் என்று, அவரைச் சார்ந்தவர் கள், முக்கியமாக பழ. நெடுமாறன் முதலா னோர் செய்திகள் தந்தார்கள்! இப்பொழு தும் தருகிறார்கள்!! அப்படி அவர் தப்பியிருந் தால் சந்திரகுப்தன் போன்று இன்னு மொரு கிலியாக சிங்கள அரசுக்கும் சிங் கள மக்களுக்கும் அவர் உருவாகலாம். அதனால் எங்கள் தரப்புக்கும் கொஞ்சம் பலம் இருந்திருக்கும்.

ஆயினும், சாணக்கியர் மக்கள் உனது வரவை எதிர்பார்க்கிறார்களா, செய்ய விரும்புவதை ஆமோதிக்கிறார்களா என பதை தெரிந்து கொண்டு சரியான நேரத் தில் அவற்றை செய்ய வேண்டும், மக்கள் விரும்பாததைத் திணித்தால் அவர்களது ஆதரவு இல்லாமல் ஆர்வம் குன்றும். ஆகவே அதைத் தெரிந்துகொண்டு நடப் பவன்தான் சரியான அரசியல் விற்பன் னன், மக்களை ஆளுவதற்கு தகுதியுள்ள வன் என்று சந்திரகுப்தனுக்கு எடுத்துச் சொன்னார்.

இலங்கை - இந்திய ஒப்பந்தம் உரு வான காலத்தில், அது மக்களால் மிகுந்த ஆவலோடு எதிர்பார்க்கப்பட்டு, அவர்கள் ஆயிரக்கணக்கில் கூடிய சுதுமலை அம் மன் கோவிலில் நடந்த கூட்டத்தில் கிட்டு, மாத்தையா உட்பட விடுதலைப் புலிக ளின் பல முக்கிய போராளிகள், சிறிலங்கா எப்படி தங்கள் வீரர்களால் மடக்கப்பட்டது என்று பேசினார்கள்.

அவற்றையெல்லாம் மக்கள் கேட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்களது எதிர் பார்ப்பும் ஆர்வமும் புலிகள் ஆயுதங்க ளைக் கையளித்து, சண்டையில்லாத ஒருநிலைமையை ஊருக்கு கொண்டுவரு வார்களா என்பதாகத்தான் இருந்தது.

கடைசியில் பிரபாகரன் எழுந்து பேசிய போது, அவரும் வரலாற்றைச் சொல்லி, முடிவில் தாங்கள் இந்தியாவை நம்பி தமிழ் மக்களின் பாதுகாப்பை அவர்களின் கைகளில் விட்டு ஆயுதங்களை கைய ளிக்க ஒத்துக் கொள்கிறோம் என்று அறி வித்தபோது மக்களின் கரகோஷ ஒலி வானைப் பிளந்தது.

அந்தக் கூட்டத்தின் வீடியோ ஒளிப்பதி வைப் பார்த்தால் மக்களின் எதிர்பார்ப்பின் பின்னணியிலிருந்த கரகோஷ ஒலியைக் காணலாம்.

அதேசமயம் அந்த கரகோஷத்தால் பிர பாகரனின் முகத்திலிருந்த ஏமாற்றத்தை யும் விசனத்தையும் கூடப் பார்க்கலாம்.

பல்லாயிரக்கணக்கில் அன்று மக்கள் எதற்கு திரண்டு வந்தார்கள் என்று சாணக் கியரின் புத்திமதியில் அதனை பிரபாகரன் கணித்திருக்க வேண்டும். அன்றில் அதன் பின்னர் தொடர்ந்த நாளகளில் அவரது மதியுரைஞரின் பேச்சைக் கேட்டாவது நடந்திருக்க வேண்டும்.

அதன் பிறகு மதியுரைஞர் நோர்வே பேச்சு வரையில் பங்கு பற்றிவிட்டு, லண் டன் சென்று விட்டார். கருணா வந்து தன் வழி சென்றார். இவற்றைச் சாதகமாக்கிய மஹிந்த தனது திட்டங்களை அமுல்ப



டுத்தினார்.

இந்த விளைவுகளை விபரிக்கும் மன நெருடல்கள் இந்த ஆக்கத்திற்கு வேண் டாம்.

அடுத்து, இனி நான் குறிப்பிடப் போவது, விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு, பின்னாளில் வன்முறையைக் கைவிட்டு, ஜனநாயக அரசியலுக்கு வந்தவரின் அரசியல் பயணம் பற்றியதாகும்.

அவர், இந்தப்பதிவில் நான் தெரிவிக்கும் சாணக்கியர் குறிப்பிட்ட உத்திகளையும், செய்திகளையும் விடுதலைப் போராட்ட காலத்திலோ, அல்லது தான் நம்பிய அரசியலுக்காகவோ, தன் இருப்புக்கா கவோ, தனது பெயருக்காகவோ பயன் படுத்திக் கொள்ளவில்லை.

"போற்றுவார் போற்றட்டும், புழுதி வாரி என்மேல் தூற்றுவோர் தூற்றட்டும், தோற்காத என் வழியை ஏற்று நம் வர லாறு, மாற்றத்தை தேடும் எம்மின இலட் சியத்தை வெல்வேன்" என்று வீணைக் கொடியை ஏந்தி - ஓங்கி அசைத்து நாடா ளுமன்ற அரசியலில் மக்களிடம் வாக்கு களைக் கேட்டவர்.

தன்னோடு இணைந்த தோழர்களின் தேவைகளை தனக்கு முன்னர் கவனித்து, அவர்களோடு உறவாடி, உணவருந்தி, எல்லோரையும் சமனாக நடத்தி, ஓர் இடதுசாரி தத்துவ பின்னணியில் அரவ ணைத்து இயங்குபவர் என்று அறியப்பட் டவர்.

அந்த நாளகளில் ஈ.பி. டி.பி. யின் அதி காரத்திலிருந்த தீவுப்பகுதி மக்கள், தாங்கள் பலவந்தமாக வேலை வாங்கப்படுகி றோம், தங்கள் மீன் அறாவிலைக்கு பறிக்கப்படுகிறது, தமது கருவாடு வர்த்த கத்தை அநியாயமாக கொள்முதல்படுத் தப்பட்டு ஈ.பி.டி.பியினரால் ஏற்றப்படுகிறது முதலான கூக்குரல்கள் எதிரொலித்தன.

அதேபோன்று 2002 இலிருந்து 2009 வரையிலான காலப்பகுதியில் சிறிலங்கா படைகளுடன் ஒத்தாசையாக இயங்கி, புலிகளின் ஆதரவாளர்கள் என்று கொல் லப்பட்ட, காணாமலாக்கப்பட்ட கணக்கில் லாத இளைஞர்களைத் தேடி பெற்றோர் இவர்களது அலுவலகங்களுக்கும் முகாம் களுக்கும் அலைந்தார்கள்.

இவை எல்லாம் மக்கள் மனதில் என் றும் பட்டவர்த்தனமாக இருக்கின்றன. காணாமலாக்கப்பட்டோருக்கான நீதி இன்னமும் கிடைக்கவில்லை. அதற்காக உறவினர்கள் இன்றும் அலைகிறார்கள்.

டக்ளஸ் தேவானந்தா, இதுவரையில் நடந்துள்ள தமிழர் விடுதலை அரசியல் போராட்டங்கள் முழுமையிலும் அனுப வப்பட்டவர். அதில் முழுமையாக அமுங்கி, பாதிப்படைந்தவர். அதனால் பல இழப்பு களை தனிப்பட்ட ரீதியிலும் தம்பியை - சகோதரியை என்று பல சொந்தங்களை யும் இழந்தவர்.

அவரோடு தோள் கொடுத்து நின்ற வர்கள் - சிங்கள அரசியல் தலைவர்கள் உட்பட - அவரை வாஞ்சையோடும் பிர மிப்புடனும்தான் பார்க்கிறார்கள். அணுகு கிறார்கள். தங்களது நம்பிக்கைக்கு உரிய வராக கருதுகிறார்கள். செயல்படுகிறார்கள்.

அவரது உயிரைப் பறிப்பதற்கு புலிக ளின் பத்துக்கும் மேற்பட்ட தாக்குதல் சம் பவங்கள் நடந்தன. ஒரு கண் பார்வையும் மங்கி, தலையில் பலத்த காயங்களையும் தாங்கி, உயிர் பிழைத்து மீண்டும் மீண்டும் எழுந்து நின்று அரசியல் செய்பவர்.

அதனால் பூனை ஒன்பது முறையும் செத்து பிழைக்கும் **(Cat has nine lives)** என்ற அடைமொழிக்கு இலக்கணப்படுத் தப்படுபவர்.

அவரைப்பற்றி மேலும் குறிப்பிட அவ ருக்கு உந்து சக்திகளாகவோ முன்னோடி களாகவோ அவரது வாஞ்சையில் இருந்த ஒன்றிரண்டு பேரைக் குறிப்பிடவேண்டும்.

(தொடரும் ....)

# வடக்குக்காணி ஆவணங்களின் இடமாற்றம் தமிழ் நிலங்களை அபகரிக்கும் கபடத்திட்டம்

## ஐங்கரநேசன் கண்டனம்



யாழ்ப்பாண மாவட்டச் செயலக வளாகத்துக்குள் இயங்கி வரும் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் வடமாகாணத்துக்கான அலுவலகத்தில் இருந்து காணி ஆவணங்கள் அநுராதபுர அலுவலகத்துக்கு இடம் மாற்றப்பட்டுள்ளன. இவ்வாறு இடம்மாற்றப்படுவதற்குப் பலரும் எதிர்ப்பை வெளியிட்டபோதும், இரவோடு இரவாக யாழ் மாவட்டம் தவிர்ந்த ஏனைய நான்கு மாவட்டங்களினதும் ஆவணங்கள் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. தமிழ் நிலங்களை அபகரித்து தென் இலங்கை வாசிகளுக்குக் கையளிக்கும் அரசாங்கத்தின் கபடத் திட்டமே இதுவாகும் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ளார்.

வடக்கின் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் ஆவணங்கள் அநுராதபுரத்துக்கு இடம் மாற்றப்பட்டமை தொடர்பாக பொ. ஐங்கரநேசன் நேற்று முன்தினம் (15.03.2021) வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தனது கண்டனங்களைத் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிடுகையில் –

காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் வசமுள்ள காணிகள் அரச காணிகள் என்றாலும் இவை மக்களின் உறுதிக் காணிகள் ஆகும். இவை 1972ஆம் ஆண்டுஅப்போதைய பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அம்மையாரால் 50 ஏக்கர்கள் காணிக்கு மேல் ஒருவர் உரிமையாளராக இருக்க முடியாது என்று கொண்டுவரப்பட்ட நிலஉச்சவரம்புச் சட்டத்தின் காரணமாக அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்ட காணிகள். வடக்கில் எமது மக்களால் கையளிக்கப்பட்ட ஏறத்தாழ 12,000 ஏக்கர் பரப்புடைய காணிகளின் ஆவணங்களே இப்போது அநுராதபுரத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

காணிச்சீர்திருத்த ஆணைக்குழுவிடமுள்ள வடக்கு மாகாணக் காணிகள் பற்றியவிவரங்கள்எவையும்வடக்குமாகாண சபையிடம் இல்லை. வடமாகாணக் காணித் திணைக்களம், வடமாகாண ஆளுநர் அலுவலகம் இவை பற்றிய விவரங்களைக் கோரியபோதும் காணிச் சீர்திருத்த ஆணைக்குழு இவற்றைத் தெரியப்படுத்த மறுத்ததோடு, மிகவும் இரகசியமாகக் காணிகளைச் சிங்கள மக்களுக்கு நீண்டகாலக் குத்தகைக்கு வழங்கும் செயற்பாடுகளிலும் ஈடுபட்டுள்ளது. இவ்வாறு, பளையில் சிங்கள மக்களுக்குக் காணிகள் ஒதுக்கப்பட்டிருப்பது அண்மையில் வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

ஒரு இலட்சம் காணித் துண்டுகளைச் சுயதொழில் முனைவோருக்குப் பகிர்ந்தளிக்கும் திட்டத்தை அரசாங்கம் ஆரம்பித்திருக்கும் நிலையிலேயே காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவினால் வடக்கின் ஆவணங்கள் அநுராதபுரத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளன. இது, வடக்கில் சிங்கள மக்களுக்குக் காணிகளை வழங்கும் கரவான திட்டத்தின் முதற்படியேயன்றி வேறல்ல இது, தமிழ் மக்களை அவர்களது பாரம்பரிய தாயகத்திலேயே சிறுபான்மையினராக்கும் பொருட்டுஅரசாங்கத்தினால்முன்னெடுக்கப்பட்டுவரும் பல்வேறு நிகழ்ச்சி நிரலின் ஓரங்கம் ஆகும். இக்காணிகள் வடக்கைப் பூர்வீகமாகக் கொண்டுள்ளவர்களுக்கு மாத்திரமே பகிர்ந்தளிக்கப் படுவதைத் தமிழ்மக்களின் நாடாளுமன்றப் பிரதிநிதிகள் எப்பாடுபட்டேனும் உறுதி செய்ய வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

# வழக்கில் தோற்றால் சட்டம் இயற்றி ஆயிரம் ரூபாவை பெற்றுக்கொடுப்போம்!

## அரசு அதிரடிக் கருத்து

கொழும்பு, மார்ச் 17

தோட்டத்தொழிலாளர்களின் நாளாந்த அடிப்படை சம்பளமாக ஆயிரம் ரூபாவை வழங்கக்கோரி சம்பள நிர்ணய சபை வலியுறுத்தியதற்கு அமைய அதனை உறுதிப்படுத்தி வெளியிடப்பட்ட வர்த்தமானியை நீக்கக்கோரி பெருந்தோட்ட கம்பனிகள் வழக்குத் தாக்கல் செய்துள்ளன.

இந்நிலையில் வழக்கில் தோற்றால் நாடாளுமன்றத்தில்சட்டமூலமொன்றைகொண்டுவந்துநிறைவேற்றி ஆயிரம் ரூபாவை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுப்பதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா நாளாந்த சம்பளம் கொடுக்கப்பட வேண்டும் என சம்பள நிர்ணய சபை வலியுறுத்தியதற்கு அமைய கடந்த 9 ஆம் திகதி இரவு தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவின் கையொப்பத்தில் வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டது.

இதனை அடுத்து பெருந்தோட்ட கம்பனிகள் ஆரம்பத்தில் இதற்கான எந்தவித மறுப்பையும் தெரிவிக்காத போதிலும் தற்போது வர்த்தமானி அறிவிப்பை நீக்கக்கோரி 20 பெருந்தோட்ட கம்பனிகளும் வழக்குத் தாக்கல் செய்துள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமை இவ்வாறு பெருந்தோட்ட கம்பனிகளின் சார்பில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பெருந்தோட்டத்துறைதொழிலாளர்களின்நிலைமை தமக்கு தெளிவாக விளங்கினாலும் கூட தற்போதுள்ள கொவிட் – 19 நெருக்கடி நிலைமையில்,சர்வதேச சந்தையில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமைகள், தேயிலைக்கான விலை குறைவு போன்ற காரணிகளால் எம்மால் தற்போது தொழிலாளர்களின் சம்பள உயர்வு குறித்து கவனம் செலுத்த முடியாது.

எனவே அதற்கான மாற்று நடவடிக்கை ஒன்றைக் கையாளும் வரையில் வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் ஆயிரம் ரூபா வழங்க முடியாதென பெருந்தோட்டக் கம்பனிகள் விளக்கமளித்துள்ளன.

இந்நிலையில் பெருந்தோட்ட கம்பனிகளின் இந்த செயற்பாடு தொடர்பாகத் தொழில் அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வாவிடம் வினவிய போது அவர் கூறுகையில் –

சற்றும் எதிர்பாராத விதமாக பெருந்தோட்ட கம்பனிகள் இவ்வாறான நடவடிக்கையை எடுத்துள்ளன.

நீண்டகாலமாக பேச்சுகளை முன்னெடுத்தும் கூட, சம்பள நிர்ணய சபையில் பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டும் கூட இப்போது கம்பனிகள் இவ்வாறு வழக்கு தாக்கல் செய்துள்ளமை ஏற்றுக்கொள்ள முடியாத விடயமாகும்.

எவ்வாறு இருப்பினும் பெருந்தோட்ட கம்பனிகள் தொடுத்துள்ள வழக்கை வெற்றிகொள்ள அரசாங்கம் முயற்சிக்கும்.

அவ்வாறு ஏலாது போனால் அடுத்ததாக நாடாளுமன்றத்தில் சட்டமூலம்ஒன்றைக்கொண்டு வந்து ஆயிரம் ரூபா அடிப்படைசம்பளத்தைநாளாந்த சம்பளமாக வழங்கக் கோரி சட்டத்தை நிறைவேற்றி பெருந்தோட்ட தொழிலாளர்களின்கோரிக்கையை நிறைவேற்ற அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் – என்றார்.

# மோட்டார் சைக்கிளை திருடிய பெண் உட்பட இருவர் கைது!

## வவுனியாவில் சம்பவம்

வவுனியா நீதிமன்றுக்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளை திருடிய பெண் உட்பட இருவரை வவுனியா தலைமையகப் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடந்தவாரம் வவுனியா நீதிமன்றுக்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று திருடப்பட்டிருந்தது. அது தொடர்பாக உரிமையாளரால் வவுனியா பொலிஸில் முறைப்பாடு அளிக்கப்பட்டிருந்தது.

அதற்கமைய விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் வவுனியா கிச்சிராபுரத்தைச் சேர்ந்தபெண்ஒருவரையும்உக்கிளாங்குளத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவரையும் கைதுசெய்துள்ளனர்.

திருடப்பட்ட மோட்டார் சைக்கிள் இராசேந்திரங்குளம் பகுதியில் இருந்து மீட்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட இருவரும் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர் எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# தினம் ஒரு விவசாயத் தகவல்

Agriculture Information

### 3 மற்றும் 31/2 மாத நெல்லினமும் அதன் அரிசியின் நிறமும்

| காலம் | வர்க்கம் | அரிசியின் நிறம் | காலம் | வர்க்கம் | அரிசியின் நிறம் |
|---|---|---|---|---|---|
| 3 மாதம் | BG300 | வெள்ளை | 31/2 மாதம் | LD355 | வெள்ளை |
| | BG304 | வெள்ளை | | LD356 | சிவப்பு |
| | BG305 | வெள்ளை | | BG94/1 | வெள்ளை |
| | BW302 | வெள்ளை | | BG350 | சிவப்பு |
| | BW272/6 B | சிவப்பு | | BG352 | வெள்ளை |
| | | சிவப்பு | | BG357 | வெள்ளை |
| | AT303 | வெள்ளை | | BG358 | வெள்ளை |
| | AT307 | | | BG359 | வெள்ளை |
| | | | | BG360 | வெள்ளை |
| | | | | AT353 | சிவப்பு |
| | | | | AT354 | வெள்ளை |
| | | | | AT362 | சிவப்பு |
| | | | | BW351 | சிவப்பு |
| | | | | BW361 | சிவப்பு |
| | | | | BW363 | வெள்ளை |

ர.ரஜீவன் – விவசாய பட்டதாரி

# களுவாஞ்சிக்குடியில் கரையொதுங்கிய ஆணின் சடலம்; விசாரணைகள் ஆரம்பம்!

களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட செட்டிபாளையம் கடற்கரையில் உயிரிழந்த நிலையில் ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக களுவாஞ்சிக்குடி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கடற்கரை வீதி, செட்டிபாளையத்தை வசிப்பிடமாகக் கொண்ட 55 வயதுடைய இரு பிள்ளைகளின் தந்தையேஇவ்வாறு உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை தனது வீட்டிலிருந்து வழமைபோல் வீட்டுக்கு அருகிலுள்ள கடற்கரைக்கு நீராடுவதற்காக சென்றிருந்த நிலையில், இவரின் சடலம் கடற்கரையில் கரையொதுங்கியிருந்ததைக் கண்ட பொதுமக்கள் பொலிஸாருக்குதகவல்வழங்கியதனடிப்படையில் பொலிஸார் சடலத்தை மீட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிக்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சர்வதேசத்திடம் நீதியை எதிர்பார்ப்பது நாட்டைக் காட்டிக்கொடுக்கும் செயலாம்

## பேராயரின் கருத்துக்கு அரசு இப்படிப் பதில்



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் இலங்கையின் நீதித்துறை சுயாதீனமாகவே இயங்குகின்றது. இங்கு என்ன பிரச்சினைகள் இடம்பெற்றாலும் அதற்கு உள்நாட்டு நீதித்துறை நீதியை வழங்கியே தீரும். அதை விடுத்து சர்வதேசத்திடம் பேராயர் நீதியை எதிர்பார்ப்பது நாட்டைக் காட்டிக்கொடுப்பதற்கு ஒப்பானதாகும்.

– இவ்வாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் அட்மிரல் சரத் வீரசேகர இன்று ஊடகங்களிடம் தெரிவித்தார்.

'உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் நீதியைப் பெற்றுத் தருவோம் என்று நாட்டு மக்களுக்கு அரசு உறுதியளித்திருந்தது. எனவே, அரசியல் நலன் கருதி குற்றவாளிகளைப் பாதுகாக்கும் விதத்தில் அரசு செயற்பட்டால் நாம் சர்வதேச நீதிமன்றத்தின் உதவியை நாட நேரிடும் என்பதை மீண்டும் வலியுறுத்திக் கூற விரும்புகின்றேன்' என்று பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்திருந்த கருத்துக்கு அமைச்சர் பதிலளிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த நல்லாட்சி அரசின் காலத்தில் தான் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் நடைபெற்றது. உலக பயங்கரவாத அமைப்பான ஐ.எஸ். அமைப்பின் இஸ்லாமிய அரசு அமைக்கும் நோக்குடனேயே இலங்கையிலும் உயிர்த்த ஞாயிறு தினத்தில் தாக்குதல் நடத்தப்பட்டது.

கடந்த ஆட்சியில் தேசியப் பாதுகாப்பு பலவீனமாக இருந்த காரணத்தாலேயே இங்கு தாக்குதலை சஹ்ரான் குழுவினர் இலகுவாக நடத்தினர்.

எமது அரசு ஆட்சிக்கு வந்த பின்னர் தேசியப் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது. உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் மறைந்திருந்த உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலுடன் நேரடியாகவும் மறைமுகமாகவும் தொடர்புபட்டவர்களைக் கைதுசெய்தோம்.

எனவே, இந்தத் தாக்குதலுடன் தொடர்புபட்ட அனைவருக்கும் தண்டனையை நிச்சயம் வழங்குவோம். பாதிக்கப்பட்ட கிறிஸ்தவ மக்களுக்கு நீதி கிடைத்தே தீரும்.

இதைவிடுத்து சர்வதேசத்திடம் பேராயர் நீதியை எதிர்பார்ப்பது நாட்டைக் காட்டிக் கொடுப்பதற்கு ஒப்பானதாகும் – என்றார்.

# கடத்தல்கள், படுகொலைகள் ஆதாரங்கள் என் வசம் உண்டு

## கண்டியைச் சேர்ந்த சிங்கள நபர் யாழில் போராட்டம்

(எஸ்.நிதர்ஷன்)

கண்டியைச் சேர்ந்த டீமன் ஆனந்த என்ற சிங்கள நபர் யாழ்ப்பாணம், சுப்பிரமணியம் பூங்கா முன்றிலில் இன்று முதல் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்டோருக்கும், கடத்திப்படுகொலை செய்யப்பட்டோருக்கும் என்ன நடந்தது? என இந்த அரசு வெளிப்படுத்த வேண்டும் எனவும், யாழ்ப்பாணத்தில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் தொடர்பில் இந்த அரசு பொறுப்புக் கூற வேண்டும் எனவும் வலியுறுத்தி இந்தப் போராட்டத்தில் அவர் ஈடுபட்டுள்ளார்.

இதன்போது இலங்கையில் குறிப்பாக வடக்கில் பல இளைஞர்கள் காணாமல் ஆக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள். அவர்களுக்கு என்ன நடந்தது என்பது தொடர்பில் இந்த அரசு உண்மையை வெளிப்படுத்த வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடத்தல்கள், படுகொலைகளில் ஈடுபட்டவர்கள் தொடர்பில் என்னிடம் பல ஆதாரங்கள் உள்ளன. அந்த ஆதாரங்களை ஜெனிவாவிலும் சமர்ப்பிக்கவுள்ளேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

படுகொலைகள் மற்றும் கடத்தல்களில் ஈடுபட்டவர்கள் தற்போது நாடாளுமன்ற உறுப்பினர்களாகவும், மாகாண சபை உறுப்பினர்களாகவும் இருக்கின்றார்கள். அவர்களைக் கண்டறிந்து அவர்களைக் கைது செய்ய வேண்டும். அதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.



வடக்கில் மட்டுமல்ல தெற்கிலும் பலர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளார்கள். அவர்களுக்கும் நீதி வேண்டும். எனினும், நான் தமிழ் மக்களுக்கு எதிராக இந்தப் போராட்டத்தில் ஈடுபடவில்லை. இலங்கையில் உள்ள அனைத்து மக்களுக்கும் உண்மை விடயம் தொடர்பில் சரியான தெளிவுபடுத்தல் வேண்டும் என்பதற்காகவே நான் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளேன். இந்தப் போராட்டம் தமிழ் மக்களுக்கு எதிரான போராட்டம் என நினைக்காதீர்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ரிஷாத் பற்றி பேச விமலுக்குத் தடை



அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் ரிஷாத் பதியுதீன் எம்.பிக்கு எதிராக அவதூறான கருத்துக் களைத் தெரிவிக்க அமைச்சர் விமல் வீரவன்ஸவுக்கு கொழும்பு மாவட்ட நீதிமன்ற நீதிவான் அருண அளுத்கே இன்று தடை உத்தரவைப் பிறப்பித்துள்ளார். அவ்வாறான கருத்துக்களை வெளியிடுவதைத் தடுக்கும் வகையில், மூன்று தனியார் தொலைக்காட்சி நிறுவனங்களுக்கும் நீதிவான் இன்று இந்தத் தடை உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

எதிர்வரும் 31ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறும் பிரதிவாதிகளுக்கு நீதிவான் அருண அளுத்கே உத்தரவிட்டுள்ளார்.

ரிஷாத் பதியுதீன் தாக்கல் செய்துள்ள மனு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப் பட்ட போது, சட்டத்தரணி ருஸ்ஜி அபீப் முன்வைத்த விடயங்களை ஆராய்ந்த நீதிவான், எதிர்வரும் 30ஆம் திகதி வரை அமுலில் இருக்கும் வகையில் இந்தத் தடை உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

அமைச்சர் விமல் வீரவன்ஸ கடந்த 9ஆம் திகதி ஆற்றிய உரையின் மூலம் தனது நற்பெயருக்கு களங்கம் ஏற்பட்டுள்ளது எனத் தெரிவித்தே ரிஷாத் பதியுதீன் இந்த மனுவைத் தாக்கல் செய்திருந்தார்.

அவ்வாறான பொய்யான கருத்துக் களை வெளயிட்டமை மற்றும் தமது பெயருக்குக் களங்கம் விளைவித்தமை தொடர்பில் 10 கோடி ரூபா நட்டஈட்டை பிரதிவாதிகளிடமிருந்து பெற்றுத்தருமாறும் ரிஷாத் பதியுதீன் நீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்துள்ளார்.

# இலங்கைக்கு பிரிட்டன் நம்பிக்கைத் துரோகம்!

## கதறுகின்றது கோட்டா அரசு

ஐக்கிய நாடுகள் மனித உடைமைகள் சபையில் இலங்கை மீதான புதிய பிரேரணைக்குப் பிரிட்டன் தலைமை தாங்குவது நட்புறவற்ற செயலாகும். இது நம்பிக்கைத் துரோகமாகும்.

இவ்வாறு சாடினார் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன.

ஐ.நா. மனித உரிமைகள் சபைகளில் இலங்கை மீதான புதுப்பிக்கப்பட்ட பிரேரணை வரைவு சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையில், அது தொடர்பில் ஊடகங்களிடம் வெளிவிவகார அமைச்சர் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை மீது முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணை நாட்டின் இறையாமையை மீறுவதாகும்.

இவ்வாறானதொரு பிரேரணைக்குப் பிரிட்டன் தலைமை தாங்குவது, ஒரு பொதுநலவாய உறுப்பினரான இலங்கை மீது பிரிட்டனின் நட்புறவற்ற செயலாகும்.



இது பிரிட்டன், இலங்கைக்குச் செய்யும் நம்பிக்கைத் துரோகமாகும்.

இலங்கையைத் திட்டமிட்ட வகையில் பிரிட்டன் தலைமையிலான சில நாடுகள் பழிவாங்குகின்றன – என்றார்.

# இலங்கையில் 7,84,500 பேருக்கு கொரோனாத் தடுப்பூசி ஏற்றல்!

இலங்கையில் 7 லட்சத்து 84 ஆயிரத்து 500 பேருக்குக் கொரோனாத் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது எனச் சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இவ்வருடம் ஜனவரி மாதம் 29ஆம்திகதி முதல் நேற்று வரை இந்தத் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.

# விபத்தால் குருதித் தட்டுப்பாடு; அவசரமாக உதவக் கோரிக்கை



(ந.லோகதயாளன்)

தலைமன்னார் பஸ் – ரயில் விபத்தைத் தொடர்ந்து மன்னார் பொது வைத்தியசாலையில் குருதித் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்று மாவட்ட அரச அதிபர் திருமதி ஏ.ஸ்டான்லி டி மெல் தெரிவித்துள்ளார்.

எனவே, படுகாயமடைந்தவர்களுக்கு மன்னார் பொது வைத்தியசாலையில் குருதி வழங்கி உதவுமாறு அவர் அவசர கோரிக்கை விடுத்துள்ளார்.

**மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்**

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மணமக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள

**076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை – அதிகாலையும் மாலையும் – உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

# உலகின் சிறந்த வர்த்தக நாமமாக 'மேட் இன் சிறிலங்கா' உருவாகும்!



## பிரதமர் மஹிந்த திடசங்கற்பம்

மேட் இன் ஶ்ரீலங்கா' உலகின் சிறந்த வர்த்தக நாமமாக உலகிற்கு எடுத்துச் செல்வதற்கு ஒரு நாடு என்ற ரீதியில் நாம் கைகோர்ப்போம் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

வாகன உற்பத்தி, வாகன உதிரிப்பாகங்கள் உற்பத்திக்கான நிலையான செயற்பாட்டு முறைமை வெளியீடு கொழும்பு ஸ்கிரில்லா ஹோட்டலில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கைத்தொழில்துறை அமைச்சர் விமல் வீரவன்ஸவால் குறித்த நிலையான செயற்பாட்டு முறைமையை உள்ளடக்கிய ஆவணம் பிரதமரால் வழங்கப்பட்டது.

இவ்வாறு வெளியிடப்பட்ட இலங்கை வாகன மற்றும் வாகன உதிரிப்பாகங்கள் உற்பத்தித் தொழிற்துறைக்கான நிலையான செயற்பாட்டு முறைமையை கைத்தொழில்துறை அமைச்சின் இணையத்தளத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் –

நீண்ட காலமாக எமது நாட்டின் தேவையாகக் காணப்பட்ட துறையொன்றுக்கு இன்று ஆரம்பம் கிடைத்துள்ளது. அது குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன்.

கொரோனாத் தொற்றுநோய்க்கு முன்னர் வாகனங்களை இறக்குமதி செய்ய ஆண்டுதோறும் பாரிய அளவிலான அந்நிய செலாவணியை செலவிட்டோம் என்பது உங்களுக்குத் தெரியும். அத்தகைய வாகனங்களை இறக்குமதி செய்ய நாங்கள் ஆண்டுதோறும் 100 – 1500 கோடி அமெரிக்க டொலர்களை செலவிட்டோம்.

எனவே கொவிட் உடன் வந்த பொருளாதார தாக்கத்தைக் குறைக்க வாகன இறக்குமதியை நிறுத்தினோம். எவரையும் துன்புறுத்தும் நோக்கத்துடன் இதனை செய்யவில்லை. அந்த நேரத்திலும் சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்கள் நாட்டில் காணப்பட்டன.

குறிப்பாக உலகளாவிய தொற்றுநோய் ஏற்பட்ட இத்தருணத்திலேயே உள்ளூர் பொருளாதாரத்தின் முக்கியத்துவம் நன்கு புரிந்துள்ளது. அதுமாத்திரமன்றி, நமது பொருளாதார அமைப்பின் குறைபாடுகளை ஈடுசெய்யவும் இது ஒரு சிறந்த வாய்ப்பாகும்.

ஓர் அமைப்பை மாற்ற முயற்சிக்கும்போது, பல்வேறு தடைகள் வரும். சிலர் அதை விரும்புகிறார்கள். சிலர் அதை விரும்பவில்லை. ஆனால் நாங்கள் ஒரு வெற்றிகரமான அமைப்பை அறிமுகப்படுத்தும்போது, அனைவரும் அந்தத் திட்டத்தில் இணைகிறார்கள்.

வாகன உற்பத்தி, வாகன உதிரிப்பாகங்கள் உற்பத்திக்கான நிலையான செயற்பாட்டு நடைமுறையொன்று இதற்கு முன்னர் காணப்படவில்லை. இத்தகைய அமைப்புகளை உருவாக்க பல திட்டங்கள் முன்வைக்கப்பட்டிருந்தாலும், அவற்றைச் செயல்படுத்த எவரும் முன்வரவில்லை.

எனக்குத் தெரியும் கைத்தொழில்துறை அமைச்சர் விமல் வீரவன்ஸ் இது தொடர்பாக நிறைய விவாதங்களை நடத்தினார். அவர் அமைச்சரவைக்கு வந்து அது பற்றி எங்களுக்கு விளக்கினார்.

ஆனால் இந்த வேலையை இவ்வளவு விரைவாக செய்ய முடியும் என்று நாங்கள் யாரும் நம்பவில்லை. இது நம் நாட்டின் கைத்தொழில்துறையில் ஒரு திருப்புமுனையாக இருக்கும் என்று நான் நம்புகிறேன். நாட்டில் ஒரு நிலையான செயற்பாட்டு முறைமை இருக்கும்போது, எந்த உள்ளூர் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கும் இது வசதியானதாக அமையும்.

அவர்கள் எந்தவித தயக்கமும் இன்றி நம் நாட்டில் வாகனத் தொழிற்துறைக்குள் நுழைவதற்கு இது வழிவகுக்கும் .உலோகம் மற்றும் உலோகம் அல்லாத பொருள்கள், மின்னணு உற்பத்திகள், டயர்கள் மற்றும் இறப்பர் கைத்தொழில்களும் இந்த வசதி ஊடாக மேம்படுத்தப்படும்.

மறுபுறம், நாட்டில் புதுமைகளுக்கு பெரும் தேவையை உருவாக்குவதற்கும், அதில் ஆர்வத்தை அதிகரிப்பதற்கும் இதுபோன்ற தரமான செயற்பாட்டு முறைமை இருப்பது முக்கியமாகும்.

அதேபோன்று கைத்தொழில்துறையில் தொழில்நுட்ப பட்டதாரிகள் மற்றும் பொறியியலாளர்கள் உட்பட சுமார் 20 ஆயிரம் நிபுணர்களுக்கு இந்தத் திட்டம் நேரடி வேலைவாய்ப்புகளை வழங்கும்.

நாம் ஒரு மேம்பட்ட உலகத்துடன் போட்டியிடுகிறோம். எங்களுக்கு எத்தனை தடைகள் வந்தாலும், இந்தப் போட்டியில் இருந்து நாம் விலகக்கூடாது. அந்நிய செலாவணியின் வெளிப்பாய்ச்சலை குறைப்பதன் மூலம் தேசிய பொருளாதாரச் சவாலை சமாளிக்கும் ஆற்றல் எமக்குள்ளது.

அமைச்சர் விமல் வீரவன்ஸ மற்றும் அமைச்சின் செயலாளர் அனுஷா பெல்பிட உட்பட அனைவருக்கும் இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக மாற்றும் திறன் உள்ளது என்பதை நான் அறிவேன்.

உங்கள் அனைவரின் அர்ப்பணிப்புடன் ஒரு வளமான நாட்டைக் கட்டியெழுப்பும் திறனும் நம்பிக்கையும் எங்களிடம் உள்ளது.

'மேட் இன் ஶ்ரீலங்கா' உலகின் சிறந்த வர்த்தக நாமமாக உலகிற்கு எடுத்துச் செல்வதற்கு ஒரு நாடு என்ற ரீதியில் நாம் கைக்கோர்த்துக் கொள்வோம். –என பிரதமர் தெரிவித்தார்.

# புர்காவிற்கு தடை விவகாரம்: அரசு அவசரப்பட மாட்டாது!



## கெஹலிய தெரிவிப்பு

இலங்கையில் புர்காவிற்கு தடை விதிக்கும் விடயத்தில் அரசாங்கம் அவசரப்படாது என அமைச்சரவைப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (செவ்வாய்க்கிழமை) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இந்த விடயம் தொடர்பாகத் தெரிவித்தார்.

புர்கா மற்றும் நிகாப் ஆகியவற்றைத் தடை செய்வது தொடர்பாகத் தற்போது பரிசீலிக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்த அமைச்சர், புர்கா மற்றும் நிகாப்பிற்கு தடை விதிக்கும் விடயத்தில் அரசாங்கம் அவசரப்படாதென்றும் குறிப்பிட்டார்.

ஆலோசனை மற்றும் ஒருமித்த கருத்துக்குப் பின்னரே புர்கா மற்றும் நிகாப்பிற்கு அரசாங்கம் தடை விதிக்கும் எனவும் அமைச்சரவைப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

புர்கா மற்றும் பதிவுசெய்யப்படாத மதரஸா பாடசாலைகளைத் தடை செய்தல் தொடர்பான பிரேரணையொன்றில் கடந்த 13 ஆம் திகதி, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர கையெழுத்திட்டார்.

அதன் பின்னர் அதனை அமைச்சரவையில் சமர்ப்பிக்கவுள்ளதாகவும் தெரிவித்திருந்தார்.

எவ்வாறாயினும் புர்காவை தடை செய்வது தொடர்பான பிரேரணை கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற அமைச்சரவையில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை எனத் தகவல்கள் தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# பாரம்பரிய உற்பத்திப் பொருள்கள் விற்பனைக் கண்காட்சி வவுனியாவில்!





சர்வதேச பெண்கள் தினத்தினை முன்னிட்டு பாரம்பரிய உற்பத்திப் பொருள்களின் விற்பனைக் கண்காட்சி நிகழ்வு வவுனியா மாவட்ட செயலக வளாகத்தில் நேற்று (செவ்வாய்க்கிழமை) இடம்பெற்றது.

இதன்போது, பெண்களால் உற்பத்தி செய்யப்படும் பல்வேறு விதமான பாரம்பரிய பொருள்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

நிகழ்வில் முதன்மை அதிதியாக கலந்துகொண்ட மாவட்ட அரசஅதிபர் சமன்பந்துலசேன கண்காட்சி நிகழ்வை நாடாவெட்டி ஆரம்பித்து வைத்தார்.

இதன் போது மேலதிக அரச அதிபர் தி.திரேஸ்குமார், உதவி மாவட்ட செயலாளர் சபர்ஜா, மாவட்ட கலாசார உத்தியோகத்தர் மாலினி கிருஸ்ணானந்தன், மற்றும் மாவட்ட செயலக உயர் அதிகாரிகள் கலந்துகொண்டு கண்காட்சியைப் பார்வையிட்டிருந்தனர்.

# அநுராதபுரம் முப்படை நினைவுத் தூபியில் புதையல் பொருள்கள் வைக்கும் நிகழ்வு!

## ஞாயிறு நடைபெறும் என்கிறார் பாதுகாப்பு செயலாளர்

முப்பது வருட கால சிவில் யுத்தத்தில் நாட்டுக்காக போராடி உயிர் நீத்த முப்படையினரை நினைவுகூரும் வகையில் அனுராதபுர புனித பூமியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள சந்த ஹிரு சேய தூபியில் புதையல் பொருள்கள் வைக்கும் மத சம்பிரதாய நிகழ்வு எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை இடம்பெறவுள்ளது.

புதையல் பொருள்களை வழங்க எதிர்பார்த்துள்ளவர்கள் எதிர்வரும் 20 ஆம் திகதி தொடக்கம் 27 ஆம் திகதிகளுக்குள் அவற்றை அநுராதபுர நகரில் உள்ள சந்த ஹிரு சேய வளாகத்தில் கையளிக்க முடியும் என பாதுகாப்பு செயலாளர் ஓய்வுப் பெற்ற மேஜர் ஜெனரல் கமல் குணரத்ன தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

30 வருடகால சிவில் யுத்தம் பாரிய போராட்டத்துக்கு மத்தியில் நிறைவு பெற்றது. யுத்தம் முடிவடைந்ததற்கு பிறகு நாட்டு மக்கள் சுதந்திரமாக வாழ்ந்தார்கள். யுத்தம் முடிவடைந்த காலத்தில் இருந்து 2014 ஆம் ஆண்டு வரையில் நாட்டின் தேசியப் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது. ஆனால் 2015ஆம் ஆண்டுக்கு பிறகு தேசியப் பாதுகாப்பு திட்டமிட்ட வகையில் பலவீனப்படுத்தப்பட்டது.

பாதுகாப்புத் துறையின் அதிகாரிகளின் அலட்சியப் போக்கு ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவத்துக்கு பிரதான காரணியாக அமைந்தது. பாதுகாப்பு தரப்பினரது ஒத்துழைப்பின் ஊடாகவே 30 வருட கால யுத்தத்தை குறுகிய காலத்தில் நிறைவுக்கு கொண்டு வர முடிந்துள்ளது.

நாட்டுக்காக உயிர் நீத்த முப்படையினரை நினைவு கூரும் வகையில் வழிபாட்டு தூபி அமைக்கும் பணிகளை முன்னாள் ஜனாதிபதி தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆரம்பித்தார். 29 ஆயிரம் படை வீரர்கள் யுத்தத்தில் கொல்லப்பட்டார்கள். 14 ஆயிரம் பேர் விசேட தேவையுடையவர்களாக்கப்பட்டார்கள். யுத்தத்தால் பாதிக்கப்பட்ட முப்படையினரை நினைவு கூருவது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

அநுராதபுரம் புனித பூமியில் மகாமேவனா பூங்காவில் ஜய ஶ்ரீ மகா போதி அமைந்துள்ள இடத்திற்கு அருகில் சந்த ஹிரு சேய தூபி நாட்டுக்காக உயிர் நீத்த முப்படையினரை நினைவுகூரும் வகையில் நிர்மாணிக்கப்படுகிறது. இதனடிப்படையில் இதுவரை 136 அடி உயரம் வரை நிர்மாணப்பணிகள் நிறைவடைந்து நாற்சதுர நிர்மாணப் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தூபியில் புதையல் பொருள்களை வைக்கும் மத நிகழ்வு எதிர்வரும் 28 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

# ரிஷாத், அஸாத் ஸாலி, ஹிஸ்புல்லா, முஜிபுர் ‘ஈஸ்டர் தாக்குதல்’ மறைமுக சூத்திரதாரிகள்

## விஜயதாஸ எம்.பி. குற்றச்சாட்டு

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலுக்கு முஸ்லிம் அரசியல் தலைவர்களான ரிசாத் பதியுதீன், அஸாத் ஸாலி, ஹிஸ்புல்லாஹ் மற்றும் முஜிபுர் ரஹ்மான் ஆகியோர் மறைமுகமாகத் துணைபோயுள்ளனர்.

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ச குற்றஞ் சாட்டினார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பான விசாரணை அறிக்கை மீதான விமர்சனங்கள் முன் வைக்கப்பட்டு வரும் நிலையிலேயே, விஜயதாஸ ஊட கங்களிடம் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நல்லாட்சி அரசு முஸ்லிம் வாக்குகளை இழந்து விடும் என்ற ஒரே காரணத்துக்காகக் கடந்த அரசில் அங்கம் வகித்த 17 முஸ்லிம் உறுப்பினர்களின் ஆலோ சனைகளுக்கு அமைய என்னை அமைச்சரவையில் இருந்து வெளியேற்ற அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுத்திருந்தார்.

நீதி அமைச்சில் இருந்து விஜயதாஸ ராஜபக்ஷவை விலக்காவிட்டால், தாம் அரசை விட்டு வெளியேறப் போகின்றோம் எனவும் முஸ்லிம் அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்கள் ரணிலுக்கு அழுத்தம் கொடுத்திருந்தனர்.

அடிப்படைவாதிகளின் கோரிக்கைகளுக்குத் தலை சாய்த்து, தன்னை அரசில் இருந்து வெளியேற்ற அப் போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுத்திருந்தார் - என்றார்.

DMI JAFFNA
A/L - 2K23
கலை, வர்த்தகம், தொழில்நுட்பம்
ஆரம்பம் :- மார்ச் 20
காலை 9 மணிக்கு
077 848 0604

## யாழ். பல்கலைக்கழகத்தில் வெள்ளியன்று இரத்த தானம்!

யாழ்ப்பாணம், மார்ச் 16

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக பாதுகாப்பு உத்தியோகத்தர் நலன் புரிச் சங்கத்தின் 40 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடாத் தப்படும் மாபெரும் இரத்த தான நிகழ்வு எதிர்வரும் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை, காலை 10 மணிக்கு, மாணவர் நலன்புரிக் கட்டடத் தொகுதியில் நடைபெறவுள்ளது.

உயிர் காக்கும் உன்னத பணியில் சமூக ஆர்வலர்களை இணைந்து கொள்ளுமாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பாது காப்பு உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கம் வேண்டுகோள் விடுத்துள் ளது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் -
076 443 8622

## தொலைபேசியில் உரையாடிபடி சைக்கிள் ஓடியதால் விபரீதம்

### வீழ்ந்து காயமுற்ற யுவதி மரணம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,மார்.17

யாழ்ப்பாணம் நாவாந்துறைப் பகுதியில் நேற்று முந்தி னம் தொலைபேசி உரையாடியபடி சைக்கிளில் பயணித்த வர்கள் தடக்கி வீழ்ந்ததில் சைக்கிள் பின் ஆசனத்தில் இருந்து பயணித்த யுவதி ஒருவர் படுகாயம் அடைந்த நிலையில் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட நிலையில் உயி ரிழந்தார்.

சுப்பிரமணியம் நிமலினி என்னும் உடுவில், சுன்னாகம் என்ற முகவரியைச் சேர்ந்த 32 வயது வயது யுவதியே உயிரிழந்தவராவார்.

உடுவிலில் இருந்து நாவாந்துறையில் இடம்பெறும் ஒரு திருமண நிகழ்விற்குச் சென்றவர், யாழ் நகரில் இருந்து நாவாந்துறையை நோக்கி நேற்று முன்தினம் 15 வயதுடைய சிறுவனின் சைக்கிளின் பின் கரியரில் இருந்து பயணித் துள்ளார். அச்சமயம் மேற்படி யுவதி கைத் தொலைபேசியை உபயோகித்துள்ளார்.

இந்த அனர்த்தம் இடம்பெற்ற சமயம் சைக்கிளைச் செலுத்திய சிறுவனும் கைத்தொலை பேசியை உபயோகித் துள்ளான். இதனால் நிலை தடுமாறி வீழ்ந்த சமயம் யுவதி பலத்த காயத்திற்கு இலக்கானார்.

காயமடைந்த யுவதியை உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்ற போதும் வைத்தியசா லைக்கு வருவதற்கு முன்பே அவர் உயிர் பிரிந்து விட்டது என்பதனை வைத்தியர் கள் உறுதி செய்தனர்.

உயிரிழந்தவரின் மரண விசார ணையை நேற்றைய தினம் யாழ்ப்பா ணம் போதனா வைத்தியசாலையில் திடீர் மரண விசாரணை அதிகாரி நம சிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.

இதேநேரம் சைக்கிளைச் செலுத்திய சிறுவன் பொலிஸாரால் கைது செய்யப் பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள் ளான்.




A/L PHYSICS
EEE
2023 Batch
zoom Class (Bilingual)
ஆரம்பம்:-18/03/2021 (08.15 PM )
2022, 2021 & Repeat
Batch வகுப்புகளும் நடைபெறுகின்றன.
T.P:-0765463054
A.Jenukananth
B.Sc Engineering (Hons) (UOM) AMIE (SL)







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 16.03.2021 இல் வெளியிடப்பெற்றது.